'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 256 சோபகிருது வருடம், ஆனி மாதம் 01ஆம் திகதி வெள்ளிக்கிழமை (16.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 26, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## இரு திணைக்களங்களை மூடுவதற்கு தீர்மானம்

02 பக்கம்



# அரச காணிகளில் மீள்குடியேற்றமா?

## அப்படி நடக்காது என்கிறார் ஜனாதிபதி ரணில்

வடக்கு, கிழக்கில் உள்ள அரச காணிகளில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை குடியேற்றப்போவதில்லையெனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறு கூறப்படும் இடங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கடவுச்சீட்டுகளை ஒன்லைன் ஊடாக விண்ணப்பிக்கும் வேலைத்திட்டத்தை ஹோமாகம பிரதேச செயலகத்தில் நேற்று (15) ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில், இப்போது குருந்தூர் விகாரை பற்றி கருத்தாடல்கள் இடம்பெறுகின்றன. நான் அங்கு தமிழ் மக்களை குடியேற்றப்போவதாகவும் கூறுகிறார்கள். அது அரசாங்கத்தின் இடமாகும்.

அங்கு தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை குடியேற்றப் போவதில்லையென இது தொடர்பில் என்னிடம் முறையிட்டிருந்த எல்லாவல மேதானந்த தேரருக்கு அறிவித்தேன்.

திரியாயில் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கப் போவதாகவும் கூறுகிறார்கள். அவ்வாறு எந்தவொரு திட்டமும் கிடையாது. அது தொடர்பில் 2018ஆம் ஆண்டு பாராளுமன்ற குழுவினூடாக அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## புலமைப் பரிசில் பரீட்சை ஒக். 23 இல்



2023ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 15ஆம் திகதி நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஜூன் 15ஆம் திகதி முதல் ஜூலை 6ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தரவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், ஜூலை 6ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர்... 02 பக்கம்





தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரியின் 90ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் கிளிநொச்சி, கனகபுரம் நண்பர் விடுதி மண்டபத்தில் நேற்று (15) இடம்பெற்றது.



### உஷ்

உதய கம்மன்பில உட்பட தென்னிலங்கை அரசியல் வாதிகள் குழுவொன்று எதிர்வரும் 21ஆம் திகதி குருந்தூர்மலைக்கு செல்லவுள்ளதாம்.

ஜனாதிபதி ரணில் தொல்பொருள் வரலாறு குறித்து பேசியமை தவறென சுட்டிக்காட்டவே இவ்வாறு அரசியல்வாதிகள் குழு புறப்படவுள்ளதாம்.

ரணிலின் தொல்பொருள் பேச்சு ஆளுங்கட்சிக்குள்ளும் சலசலப்பினை ஏற்படுத்தியுள்ளதாம்.

## வறிய மாணவர்களின் கல்விக்கு ஆளுநரின் சம்பளம் நன்கொடை

### சப்ரகமுவவில் நவீன் திசாநாயக்க முன்மாதிரி



**இரத்தினபுரி செய்தியாளர்**

சப்ரகமுவ மாகாண ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நவீன் திசாநாயக்க நேற்று (15) தனது கடமைகளை பொறுப்பேற்றதுடன் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில் வறுமையான பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக தனது மாதாந்த சம்பளத்தை ஒதுக்குவதாகவும் உறுதியளித்தார்.

இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபை கட்டடத் தொகுதியில் அவர் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

சப்ரகமுவ மாகாணத்தில் கல்வி கற்கும் வறுமையான... 02 பக்கம்



## பிரிவினைவாதம் இருக்கும்வரை நாடு முன்னோக்கிச் செல்லாது

### ஒற்றுமையே அவசியமென்கிறார் அமைச்சர் விஜயதாச

**நா. தினுஷா**

ஜனநாயக குடியரசு என்று கூறிக்கொண்டாலும், எமது நாட்டில் வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பு இல்லை. பிரிவினைவாதத்தின் காரணமாகவே இலங்கை இந்த நிலைமையில் இருக்கிறது. 02 பக்கம்

## அமைச்சர்கள் நியமனம் விரைவில்

### மொட்டு கட்சி நம்பிக்கை

**நா. தினுஷா**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டு சுற்றுப்பயணம் நிறைவடைந்ததன் பின்னர், அமைச்சரவை அமைச்சர்களை நியமிப்பது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதிக்கும் ஆளுங்கட்சி தலைவர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் (14) கொழும்பில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சி தலைவர்கள் சிலர் கலந்துகொண்டிருக்கவில்லை என்றும் அறிய முடிகிறது. 02 பக்கம்

## நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களுக்கு ஆதரவு

### ஜனாதிபதி ரணிலிடம் உறுதியளித்தார் பெசில்



**நமது நிருபர்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன தொடர்ந்தும்... 02 பக்கம்





### கமெண்ட் கந்தர்...



தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகமா சரத் வீரசேகர எம்.பியை போட்டால் முடிஞ்சுது பிரச்சினை..!

## நாய்களுக்கு பரவும் அபாயமான நோய்

### மத்திய மாகாணத்தில் தீவிரம்

**கலஹா செய்தியாளர்**

இனங்காணப்படாத ஒருவகை அபாயகரமான சுவாச நோய் நாய்க் குட்டிகளில் பரவி வருவதாக மத்திய மாகாண கால்நடை வைத்தியர் உபுல் சாகரவசம் தெரிவித்தார்.

இந்த நோய்க்கான உரிய சிகிச்சை முறைகள் இதுவரை காணப்படாமையால் 8 மாதத்துக்குட்பட்ட நாய்க்குட்டிகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். 02 பக்கம்

## குருந்தூர்மலை விகாரைக்குரியது

### சரத் வீரசேகர திட்டவட்டம்



**நா. தினுஷா**

குருந்தூர் விகாரை உள்ளிட்டவை தொல்பொருள் ஆதாரங்கள் நிறைந்த இடங்களாகும். இவற்றை சமத்துவத்துடனேயே முன்னெடுத்துச் செல்லவேண்டும். அதற்கு மாறாக யாராவது பலவந்தமாக இவற்றை கைப்பற்ற முயற்சித்தால் அது முழுமையாக தவறான விடயமாகும் என்று... 02 பக்கம்




ஹட்டன், பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்த இரட்டையர்களான விக்னேஷ்வரன் மற்றும் தயாபரன் ஆகிய இருவரும் யாழ்ப்பாணம் முதல் கொழும்பு காலி முகத்திடல் வரையில் நடந்து நேற்று (15) சாதனைபடைத்தனர். இருவரும் "சோழன்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

## அரச காணிகளில்...

எவ்வாறெனினும் இந்த இடங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

உத்தேச ஒளி, ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலமானது எந்தவொரு தரப்பினருக்கும் பாரபட்சம் ஏற்பட்டால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாக அமையும். உலக நாடுகளில் இலத்திரனியல் ஊடகங்களை கையாள்வதற்கு இவ்வாறான முறை காணப்படுகிறது. ஒன்லைன் முறையூடாக கடவுச்சீட்டு வழங்கும் திட்டத்தை இன்று தொடங்குகிறோம்.

இதனுடன் நாட்டின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டமும் வேகமாக முன்னேறி வருகிறது. அடுத்த சில ஆண்டுகளில் நாட்டின் அனைத்து துறைகளிலும் டிஜிட்டல் மயமாக்கலை செயல்படுத்துவதே எங்கள் நோக்கமாகும் என்றார்.

# தேர்தலுக்கு தயாராகும் புதிய கூட்டணி

## கிரியெல்ல எம்.பி. தகவல்



*நா. தினுஷா*

நாட்டில் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட வேண்டியது அவசியமாகும். அதேபோன்று, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய நாட்டை கட்டியெழுப்பக்கூடிய புதிய கூட்டணியொன்று எதிர்க் கட்சியினால் உருவாக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தல் இடம்பெற்றாலும் அந்த தேர்தலில் வெற்றிகரமாக போட்டியிடும் வகையிலாக பரந்துபட்ட கூட்டணியாக இது அமையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக் ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மேலும், பொதுஜன பெரமுனவிலுள்ள உறுப்பினர்கள் இருவேறு நிலைப்பாடுகளில் இருக்கிறார்கள். ஆகவே, பாராளுமன்றத்தில் இந்த அரசாங்கத்துக்கு இருக்கும் பெரும்பான்மைப்பலம் அநேகமாக இந்த வருடத்தின் இறுதியில் இல்லாமல் போய்விடும் என அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று (15) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் ,

மார்ச் மாதம் இடம்பெற்றிருந்த தேர்தல் காலந்தாழ்த்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் அந்தத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை எடுப்பதாக தெரியவில்லை. இவ்வாறான நிலையில் அடுத்த வருடத்தின் முதலாவது காலாண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக்கூடும் என்று அரசாங்கம் குறிப்பிட்டு வருகிறது. உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த அஞ்சும் அரசாங்கம் எவ்வாறு ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் ?

ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் என்பவற்றுக்கு முதல் சட்டப்படி நடத்த வேண்டிய தேர்தலை நடத்த வேண்டும். நீதிமன்ற தீர்ப்பையும் கவனத்தில் கொள்ளவில்லை. தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளையும் பாராளுமன்றத்துக்கு அழைத்து விசாரணைக்குட்படுத்த இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

எமது மக்களின் உழைப்பை சுரண்டும் செயற்பாட்டை இந்த அரசாங்கம் கட்சிதமாக முன்னெடுத்து வருகின்றது. இதுவரையில் எமது நாட்டை அபிவிருத்தியின் பாதையில் கொண்டு செல்வதற்கான நிவாரணம் கிடைக்கவில்லை. கடன் மறுசீரமைப்பு செய்தால் மாத்திரமே எம்மால் நிவாரணங்களை எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும். கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவும் இதுவரையில் சாதகமான பதில் எதனையும் வழங்கவில்லை.

சட்டத்தின் ஆட்சியில்லாத நாட்டுக்கு எந்தவொரு முதலீடுகளும் கிடைக்காது. நாட்டின் இன்றைய நிலைமையின் காரணமாக ஜி.எஸ்.பி. பிளஸ் நிவாரணம் கூட அச்சுறுத்தல் நிலைமையிலேயே இருக்கிறது.

ஆகவே எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டணியொன்றை உருவாக்கி வருகிறோம். அதற்கான கலந்துரையாடல்களும் சாதகமாக அமைந்துள்ளன. எதிர்த் தரப்பிலுள்ள சகல கட்சிகளும் எங்களுடன் பேச்சுவார்த்தையை முன்னெடுத்து வருகின்றன. சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணியொன்றை உருவாக்கும் நோக்கிலேயே அந்த கலந்துரையாடலை முன்னெடுத்து வருகின்றோம். ஏதிர்காலத்தில் எந்தவொரு தேர்தல் வந்தாலும் எதிர்த் தரப்பில் பரந்துபட்ட கூட்டணியை உருவாக்குவோம்.

இந்த அரசாங்கத்தால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது. அரசாங்கத்தில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். இந்த அரசாங்கத்திலுள்ளவர்களே நாட்டை வங்குரோத்து நிலைக்குள்ளாக்கினார்கள்.

கடன் செலுத்தாமையின் காரணமாகவே ஓரளவு சீரான நிலைமை நிலவுகிறது. 2029 ஆம் ஆண்டு வரை நாட்டை கொண்டு செல்ல ஒரு வருடத்துக்கு 12 பில்லியன் டொலர் அவசியமாகும். முதல் 6 பில்லியன் டொலர் நாட்டின் அத்தியாவசிய தேவைகளுக்கும் மிகுதி 6 பில்லியன் டொலர் கடன் மீள்செலுத்துகைக்குமாகும்.

எமது நாட்டுக்கு புதிய அரசாங்கமொன்று அவசியமாகும். தேர்தல் வேண்டாம் என்று நாங்கள் கூறவேண்டும்.

முதலில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தவேண்டும். இதற்கு வருடத்தின் இறுதியில் அரசாங்கத்துக்கு இருக்கும் பெரும்பான்மைப் பலம் இல்லாமல் போகும். காரணம், பொதுஜன பெரமுனவின் அநேகமான உறுப்பினர்கள ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கிறார்கள்.

மேலும், சிலர் எதிர்க் கட்சிக்கு சென்று ஐந்து, பத்து வருடங்கள் இருந்துவிட்டு மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என்றார்.

## இரு திணைக்களங்கள்...

உள்ளக வர்த்தக திணைக்களம் மற்றும் தொலைதொடர்பாடல் திணைக்களம் என்பவற்றை மூடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான வர்த்தமானி அறிக்கை கடந்த 13ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் நுகர்வோர் விவகார அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் அதிகாரசபை சட்டத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டு உள்ளக வர்த்தகத் திணைக்களம் மூடப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 02ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கூட்டிணைப்புக் கட்டளை ஒன்றின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டு, 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதி 596/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு ஒரு கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்ட தொலை தொடர்பாடல் திணைக்களமும் மூடப்படுவதாக அந்த வர்த்தமானியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அமைச்சர்கள்...

இருந்தபோதும் எதிர்காலத்தில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கும் ஆளுந்தரப்பு சந்திப்பை மாதாந்தம் முன்னெடுப்பதற்கும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்களுடனான சந்திப்பொன்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பெசில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

அந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கூட்டணி அமைப்பது தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை. பல்வேறு கட்சிகள் ஒன்றிணைந்தே இந்த அரசாங்கத்தை முன்னெடுத்து வருகிறோம். அதற்கமைய, அரசாங்கத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே கட்சித் தலைவர்களுடன் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து மாதாந்தம் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார். அதேபோன்று, நிபந்தனைகளின்றி நாட்டை மேம்படுத்துவதற்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்கும் ஒத்துழைப்பு வழங்கவும் கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளார்கள்.

இந்த கூட்டத்தை யாரும் புறக்கணிக்கவில்லை. அநேகமான பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள். ஒருசிலர் அவர்களின் நிலைப்பாடுகளுக்கமைய இந்த கலந்துரையாடலில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அறிவித்திருந்தார்கள். ஒருசிலர் வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததால் ஜனாதிபதிக்கு தொலைபேசி அழைப்பையேற்படுத்தி கலந்துகொள்ள முடியாது என்று அறிவித்திருந்தனர். இது கட்சியடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானமல்ல.

ஜனாதிபதிக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் முரண்பாடுகள் எதுவும் இல்லை. நாட்டின் எதிர்காலத்துக்காக வரையறைகளின்றி செயற்பட ஜனாதிபதி உள்ளிட்டோர் தமது இணக்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கட்சித் தலைவர்களுடன் எதிர்காலத்தில் முன்னெடுக்கவிருக்கும் கலந்துரையாடல்களில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைய அமைச்சரவை அமைச்சர் பதவிகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் தீர்மானிக்கப் படும். அரசியலமைப்பு ரீதியான அந்த செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு யோசனை முன்வைத்துள்ளோம். ஜனாதிபதி வெளிநாடு சென்று வந்ததன் பின்னர் அதுகுறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்று நம்புகிறோம்.

நாங்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டோம். ஜனாதிபதித் தேர்தலிலும் 69இலட்சம் பெரும்பான்மை வாக்குகளை பெற்றுக்கொண்டோம். ஆகவே, தமக்கு வாக்களித்த மக்களுக்காக சேவையாற்ற பிரதிநிதிகளுக்கு தனியான பலம் வேண்டும். ஒரு வருடத்துக்கு முன்னர் இடம்பெற்ற போராட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகளை சகலரும் அறிவார்கள். ஒரிசிலரின் அரசியல் தேவைகளுக்காக, தேவையற்ற வகையில் மக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதும் தெளிவாக தெரிகிறது.

இன்றுள்ள நிலைமைகளுக்கமைய அரசாங்கத்துக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் முரண்பாடு இல்லை என்று கூற முடியும். நாளை நிலைமை எவ்வாறு இருக்குமென்று உத்தரவாதப்படுத்த முடியாது. இன்றுள்ள அரசியல் நிலைமைகள் எதிர்காலத்தில் மாற்றமடையுமென்றால் எதிர்காலத்தில் இடம்பெறப்போம்கு விடயங்களை இன்றே எதிர்வுகூற முடியாது.

## நாட்டைக் கட்டியெழுப்பும்...

ஆதரவை வழங்கும் என கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பெசில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் அரசாங்க தரப்பு கட்சித் தலைவர்களுடன் நேற்றுமுன்தினம் (14) இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே பெசில் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ஜீவன் தொண்டமான், பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல்.எம். அதாவுல்லா உள்ளிட்ட குழு இதன்போது கலந்துகொண்டது.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பெசில் ராஜபக்ஷ, சில தொழிற்சங்கங்களும் தமது கட்சியைச் சேர்ந்த சில உள்ளூர் அரசியல்வாதிகளும் அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் முரண்பாடான நிலையில் கருத்து வெளியிடுவதாகவும் ஆனால் அந்த பிரச்சினைகள் எதுவும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிக்காத அளவுக்கு தீவிரமானவை அல்ல எனவும் தெரிவித்தார்.

கலந்துரையாடல் மூலம் ஒன்றிணைந்து செயற்படும் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் எனவும் அதற்காக மாதத்துக்கு ஒரு நாள் ஜனாதிபதியை நேருக்கு நேர் சந்திப்பது அவசியமானது எனவும் பெசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.மேலும், தான் உட்பட பொதுஜன பெரமுன கட்சி அண்மைக்கால வரலாற்றில் பல ஜனாதிபதிகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளதாகவும் அந்த அனுபவத்தின் படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் இல்லாத வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் செயற்பாட்டுப் பணியாளர்கள் இருப்பதாகவும் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.ஜனாதிபதியின் தலைமைப் பணிப்பாளர் சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் கடமைகளை தாம் பாராட்டுவதாகக் குறிப்பிட்டுள்ள பெசில் ராஜபக்ஷ, மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஜனாதிபதியின் தலைமை அதிகாரியாக சாகல ரத்நாயக்கவும் ஜனாதிபதியின் செயலாளராக சமன் ஏக்கநாயக்கவும் இணைந்து செயற்படுவது மிகவும் இலகுவானது. அவர்கள் எந்த நேரத்திலும் கலந்துரையாடலுக்கும் கேட்பதற்கும் தயாராக உள்ளனர்.

இப்பதவிகள் கிடைக்கும் போது பலருக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கக்கூட வாய்ப்பு கிடைப்பதில்லை. ஆனால் இருவரும் அந்த பலவீனத்தால் பாதிக்கப்படுவதில்லை.

நமது பிரதமர் சற்று வேலைப்பளுவுடன் இருப்பதால் அவரை தொலைபேசியில் தொடர்புகொள்வது கடினமாகவுள்ளது. ஆனால் ஜனாதிபதி அப்படியல்ல. ஜனாதிபதி எத்தனை வேலையாக இருந்தாலும் ஓர் அழைப்பை எடுத்தவுடனேயே உடனேயே அதற்குப் பதிலளிப்பார். ஜனாதிபதியாக அப்படிச் செய்திருப்பது சிறப்புப் பாராட்டுக்குரியது.

எவ்வாறாயினும் ஜனாதிபதியின் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்துக்கு கட்சி என்ற வகையில் நாம் இந்த ஆதரவை வழங்கியுள்ளோம். பொதுஜன பெரமுனவுடன் தொடர்புடைய ஏனைய கட்சிகளும் இதற்கு உடன்படுகின்றன.

இப்படி மாதம் ஒருமுறை கூடி விவாதித்தால், உள்ளூர் அரசியல் தலைவர்கள் தெரிவிக்கும் சில ஆட்சேபனைகளை நமது தொழிற்சங்கங்கள் சிலவற்றாலும் தீர்க்க முடியும். அத்துடன், தற்போது முன்னெடுக்கப்படும் இந்த செயற்பாடுகளுக்கான எமது முன்மொழிவுகளையும் யோசனைகளையும் முன்வைக்க முடியும்" என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். இதுவரை வழங்கப்பட்டு வந்த ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும் எனவும் காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

## குருந்தூர்மலை...

தேசிய பாதுகாப்பு தொடர்பான மேற்பார்வைக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரியர்அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் (14) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது வரலாற்றை பொறுத்தவரையில் எமது நாடு புத்தசாசனத்தால் வேரூன்றியுள்ளது. அவ்வாறானதொரு நாட்டிலேயே ஏனைய இன மக்கள் ஐக்கியமாகவும் சமத்துவத்துடனும் வாழ்ந்து வருகிறார்கள். நூறு வருடங்களாக இந்த குருந்தூர் மலை விகாரைக்கு அருகிலுள்ள நிலங்களில் விவசாயம் செய்யப்பட்டதாக எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். ஆனால், அவரது கருத்து முற்றிலும் தவறானதாகும். இதற்கு தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரும் சரியான பதிலை வழங்கியிருக்கவில்லை. குருந்தூர் விகாரை 1933 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி ஆங்கிலேயர் ஆட்சியின்போது வர்த்தமானியிடப்பட்டுள்ளது. இந்த குருந்தூர் விகாரை 78 ஏக்கர் நிலப்பரப்பும் இரு வீதிகளையும் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது.

யுத்தத்தின் பின்னர் அங்கு பரவலடைந்துள்ள தொல்பொருள் ஆதாரங்களை மதிப்பிட்டு மேலும் 229 ஏக்கர் காணியை அடையாளங்கண்டு அதனை வரையறுப்பதற்கான கற்கள் மற்றும் தூண்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. நாகசோலை வனப்பகுதியிலேயே இந்த விகாரை அமைந்துள்ளது. 1932 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி நாகசோலை வனப்பகுதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. ஆறாயிரத்து 125 ஏக்கர் காணி இந்த வனப்பகுதிக்கு சொந்தமானதாக இருக்கிறது. இந்த வனப்பகுதிக்குள் இருக்கும் தொல்பொருள் ஆதாரங்களை உரிமைக்கொண்டாடவோ அங்குள்ள கற்களை அகற்றவோ யாருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்புடைய நபரொருவர் இதனை அண்மித்த நூறு ஏக்கர் காணியில் விவசாயம் செய்ய முயற்சித்துள்ளார். அதற்கு எதிராக தற்போது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வரலாறுகளை பாரக்கும்போது எம்பிலிபிட்டிய சங்கபால விகாரைக்கு 12 ஆயிரம் ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. ரிதி விகாரைக்கு 3500 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது.இவற்றை சமத்துவத்துடனேயே முன்னெடுத்துச் செல்லவேண்டும். அதற்கு மாறாக யாராவது பலவந்தமாக இவற்றை கைப்பற்ற முயற்சிக்கிறார்கள் என்றால் அது முழுமையாக தவறான விடயமாகவே நாங்கள் கருதுகிறோம் என்றார்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.06.14
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5145
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,442,404.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 1 4 1 5 5 7

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3387
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,935,644.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 31 54 55 57

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1600
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,460,587.92
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 9 4 9 0 1 7

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1175
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,902,745.20
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 28 55 62 73

ராசி சுப பலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 454
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,579,350.00
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 28 34 50 61
விசேட இலக்கினம் சிம்மம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1493
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 329,582,546.00
ஆங்கில எழுத்து B
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 01 37 47 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## வறிய மாணவர்களின்...

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக தனது மாதாந்த சம்பளத்தை நன்கொடை செய்வதாக அவர் இதன்போது அறிவித்தார். மேலும், இதற்கான கடிதத்தை சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரியவிடம் கையளித்தார்.

நவீன் திசாநாயக்க தனது கடமைகளை பொறுப்பேற்பதற்கு முன்பு இரத்தினபுரியில் அமைந்துள்ள மகா சமன் தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளிலும் கலந்து கொண்டார்.

அத்துடன் அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றதன் பின் மாகாண சபையில் இடம்பெற்ற விசேட கூட்டத்திலும் கலந்து கொண்டார்.

## நாய்களுக்கு...

நோயின் அறிகுறிகளாக மூச்சு விடுவதில் சிரமம், மூச்சு விரைவாக வெளியேறுதல், வாய் முரசு வெளிருதல் அல்லது பழுப்பு நிறமாதல், வாந்தி, வயிற்றோட்டம், சுறுசுறுப்பின்மை, உணவு வெறுப்பு ஆகியன காணப்படுமெனவும் வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய மாகாணத்துக்குட்பட்ட கண்டி, நுவரெலியா, மாத்தளை மாவட்டங்களில் இந்த நோய் பரவல் தீவிரமாக காணப்படுவதாகவும் கம்பளை, நாவலப்பிட்டி, கினிகத்தேனை, ஹட்டன் பகுதிகளில் 80 சதவீதமான நாய்க்குட்டிகளை இந்நோய் தாக்கியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதெனவும் அவர் கூறினார்.

## பிரிவினைவாதம்...

பிரிவினைவாதம் இருக்கும் வரை நாடு முன்னேற்றப் பாதையை நோக்கி பயணிக்காது என்று நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சின் அலுவலகத்தில் நேற்று (15) இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஏனைய நாடுகளை போன்று எமது நாட்டின் அரசியலமைப்பிலும் சமத்துவத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையானளவு அத்தியாயங்களும் உறுப்புரைகளும் இருக்கின்றன. சமத்துவம், ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான எண்ணிக்கையில் சட்ட ஏற்பாடுகள் இருக்கின்றன.

இருந்தபோதும், எமது நாடு ஒவ்வொரு முறையும் இரத்த ஆற்றினால் நிரம்புகிறது. 1971 ஆம் ஆண்டில் 12 ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்டார்கள். 1988, 1989 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் 60 ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்கள். வடக்கில் இடம்பெற்ற பிரிவினைவாத யுத்தத்தால் மேலும் 60 ஆயிரம் பேர் உயிரிழந்தார்கள். இவ்வாறு இருக்கையில், எதிர்காலம் தொடர்பில் எம்மால் எவ்வாறு சிந்திக்க முடியும்.

இவ்வாறான கலாசாரம் கொண்ட நாட்டில் எந்தளவு பொருளாதார அபிவிருத்தியை மேற்கொண்டாலும் சட்ட மாற்றங்களை செய்தாலும் மக்களினதும் எதிர்கால சந்ததியினருக்கும் எந்த உத்தரவதாமும் இல்லை. ஆகவே, எமது நாட்டில் வாழும் சகலரும் எமது சகோதரர்கள், உறவினர்கள் பெற்றோர்கள் என்ற கருத்தோட்டம் எமது மக்களின் மத்தியில் ஏற்பட வேண்டும். நாட்டில் அந்த உணர்வை ஏற்படுத்தும் வரையில் அபிவிருத்தியையோ மக்களின் வாழ்க்கையில் சிறப்பையோ எதிர்பார்க்க முடியாது.

எமது நாட்டில் இருப்பவர்கள் சகலரும் கருப்பினத்தவர்களாவர். எமது சமூகத்தில் யாரும் வெள்ளையர்கள் இல்லை. ஆனாலும் எமது மக்கள் இன ரீதியாகவும் கட்சி அடிப்படையிலும் கலாசார ரீதியிலும் பாலினம் ரீதியாகவும் பிரிவடைந்து இருக்கிறார்கள். ஜனநாயகம் பிரிவினைக்கானது அல்ல. ஜனநாயகத்தின் பிரதான பண்பே வேறுபட்ட சமூகத்தில் ஒற்றுமை காண்பதாகும்.

ஆனால், அந்த பண்பிலிருந்து விலகிவிட்டு, தொடர்ந்து ஜனநாயகத்தை பற்றியே கருத்துரைக்கிறோம். ஆகவே, எவ்வளவு செய்தாலும் அதன் பிரதிபலன்களை எதிர்பார்க்க முடியாது. இந்தியா பன்மைத்துவம் கொண்ட நாடாக இருந்தாலும் அந்த மக்களிடையே இந்தியர்கள் என்ற உணர்வு இருக்கிறது.

ஆனால், எமது நாட்டில் அவ்வாறானதொரு நிலைமை இல்லை. பிரிவினைவாதத்தின் காரணமாகவே இன்று எமது நாடு இந்த நிலைமையில் இருக்கிறது என்றார்.

## புலமைப் பரிசில்...

இணையத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும் முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலக்கெடு நீடிக்கப்படமாட்டாது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உழைத்து வாழும் தோட்டத் தொழிலாளர்களின் சுயகௌரவத்தை விட்டுக்கொடுக்க இடமளியேன்

**பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களிடம் சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு**







(ஆ.ரமேஸ்)

உழைத்து வாழும் தோட்டத் தொழிலாளர்களின் சுயகௌரவத்தை விட்டுக்கொடுக்க இடமளிக்கமாட்டேன். ஹைபொரஸ்ட் தோட்டத் தொழிலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பேன். இதற்கு தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் ஒன்றுபட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

மத்துரட்ட பெருந்தோட்ட பிரவுன்ஸ் நிறுவனத்தின் கீழ் இயங்கும் ஹைபொரஸ்ட் இலக்கம் 2 தோட்ட மக்கள் தோட்ட நிர்வாகத்தின் ஒழுக்கமற்ற நிர்வாக செயற்பாட்டுக்கு எதிராக கடந்த 09ஆம் திகதி முதல் பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் தொழில் மற்றும் நிர்வாக கெடுபிடிகள் தொடர்பில் தீர்வைப் பெற்றுத்தருமாறு ஹைபொரஸ்ட் தோட்ட மக்களால் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் ஹைபொரஸ்ட் இலக்கம் 02 தோட்டத்துக்கு நேற்று (15) அழைக்கப்பட்டிருந்தார்.

மக்களின் அழைப்பையேற்று அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. அதன்போதே பாராளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தோட்ட கொழுந்து மடுவத்தில் ஒன்று திரண்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தினால் இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து எடுத்துரைத்தனர்.

தொழிலாளர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர், தோட்ட நிர்வாகத்தின் அடாவடித்தன நிர்வாக செயற்பாட்டை கண்டித்ததுடன் தோட்ட நிர்வாகத்தின் செயற்பாட்டுக்கு தகுந்த நடவடிக்கையை நுவரெலியா தொழில் திணைக்களம் மற்றும் தொழில் அமைச்சு ஊடாக எடுக்கப்படும் எனத் தெரிவித்து அதற்கான பேச்சுவார்த்தைக்கு சகல கட்சிகளின் பிரதிநிதிகளையும் அழைத்தார்.

மேலும் நுவரெலியா தொழில் திணைக்களத்தில் உதவி தொழில் ஆணையாளருடன் இன்று (16) காலை பேச்சுவார்த்தை நடத்தவும் ஒழுங்கு செய்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆறு நாட்களாக பணி நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஹைபொரஸ்ட் இலக்கம் 02 தோட்டத் தொழிலாளர்கள் இம்மாதம் தமக்கு வழங்கிய ஊதியத்தில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக ஆதாரத்துடன் தெரிவித்து ஊதியத்தை பெற மறுத்துள்ளனர். இத்தோட்ட மக்கள் தோட்ட நிர்வாகத்தினால் அடக்குமுறைக்கு ஆளாகி வஞ்சிக்கப்பட்டுள்ளனர். தோட்ட அதிகாரி உள்ளிட்ட சக உத்தியோகத்தர்களினால் இவர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டுள்ளனர்.

எனவே உழைத்து வாழும் தோட்ட தொழிலாளர்களின் சுயகௌரவத்தை விட்டுக்கொடுக்க இடமளிக்கமாட்டேன். ஹைபொரஸ்ட் தோட்டத் தொழிலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பேன். இதற்கு தொழிற்சங்க பேதமின்றி அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டோர் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்

**ஊடகங்களின் உதவியையும் கோருகிறது டெங்கு ஒழிப்புக்கான மேல்மாகாண உப குழு**



டெங்கு நோய் உறுதிப்படுத்தப்படும் வரை காய்ச்சல் பீடிக்கப்பட்டுள்ளவர்களை பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துவதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும். அது தொடர்பில் மக்களைத் தெளிவூட்ட ஊடகங்களின் ஆதரவு அவசியமாகும் என டெங்கு ஒழிப்பு நிபுணர் குழுவின் தலைவி இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சீதா அரம்பேபொல வலியுறுத்தியுள்ளார்.

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்த நியமிக்கப்பட்ட மேல் மாகாண உபகுழு நேற்றுமுன்தினம் (14) மேல் மாகாண தலைமை செயலகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் கூடியது. இதன்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்ட விடயத்தை வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் டெங்கு ஒழிப்புக்கான நிபுணர் குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டதுடன் அந்த நிபுணர் குழு மாகாண மட்டத்தில் 09 உப குழுக்களையும் நியமித்துள்ளது.

இந்நிலையில் நிபுணர் குழுவின் தலைவி இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தலைமையில் கூடிய மேல் மாகாண உபகுழு, எதிர்வரும் சில தினங்களுக்குள் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்தது.

தற்போதைய சூழ்நிலையானது நோய்க் காரணி மற்றும் வைரஸின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் எனத் தெரிவித்த குழுவின் தலைவி வைத்தியசாலைகளை சுற்றியுள்ள பகுதிகளில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த தனி வழிகாட்டுதல்களைத் தயாரிக்குமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அறிவுறுத்தினார். இதேவேளை வைத்தியசாலைகளில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தவும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்ட இடத்தில் (Fever Corners) அவர்களை தனிமைப்படுத்தவும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மூலம் வேறு ஒருவருக்கு நோய் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் குறுஞ்செய்திகள் மூலம் தெரிவிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அறிவுறுத்தினார்.

டெங்கு நுளம்புகள் அதிகம் பெருகும் பகுதிகளான பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், அரச மற்றும் தனியார் நிறுவன வளாகங்கள், வியாபார பகுதிகள், கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் பகுதிகள் ஆகியவற்றை சோதனையிடுவதற்காக வாரத்தின் ஐந்து நாட்களை ஒதுக்கிக்கொள்ளுமாறும் அப்பகுதிகளை சோதனையிடும் பணிகளுக்கு பொலிஸார் மற்றும் முப்படையினரின் உதவிகளை பெற்றுக்கொள்ளுமாறும் உரிய தரப்புகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த உகந்த ஆடைகளை அணிந்து வருவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டதோடு அதனை கட்டாயமற்றதாகவும் பெற்றோர்களுக்கு மேலதிக செலவுகளை ஏற்படுத்தாத வகையிலும் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கொவிட் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளின் போது சிறப்பாக பணியாற்றியிருந்த ‘டெங்கு தடுப்பு குழு’ எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அவதானம் செலுத்திய குழுத் தலைவி, அந்த பிரச்சினைகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுப்பதாகவும், அவர்களின் உதவிகளை பெற்றுக்கொண்டு வலுவான டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்.

விசேட தேவையாக கருதி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் போது சுகாதார வைத்திய அதிகாரிகள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை நிவர்த்திப்பதோடு அவர்களுக்கு அவசியமான வசதிகளை மேம்படுத்துமாறு இராஜாங்க அமைச்சர் மாகாண ஆளுநர்களுக்கு அறிவுரை வழங்கினார். அதேபோல் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுடன் கலந்துரையாடி நடைமுறைத் தகவல்களை அறிந்துகொண்ட பின்னரே வாராந்தம் இடம்பெறும் உப குழு கூட்டத்தில் வலய சுகாதார பணிப்பாளர்கள் கலந்து கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மேல் மாகாண பிரதம செயலாளர் பிரதீப் யசரத்ன, மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தம்மிக்க ஜயலத், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் காமினி தர்மசேன, மாகாண நிர்வாகச் செயலாளர் ஏ.டீ.எஸ்.சதீகா, ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் புத்திகா எஸ்.கமகே, ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஷானுக கருணாரத்ன மற்றும் மேல் மாகாண டெங்கு ஒழிப்புக்கான உப குழுவின் உறுப்பினர்கள், தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 01ஆம் நாள்**
**வெள்ளிக்கிழமை**

மேஷம்: வீட்டுக்கான முக்கிய செலவுகளை இன்று செய்வீர்கள். காரியங்கள் சற்றுத் தாமதமாகி பின் நிறைவேறும்.

ரிஷபம்: குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். உடல் நோய்கள் குணமடையும்.

மிதுனம்: ஆணவத்தை அடக்கினால் வெற்றி நிச்சயம். பயணங்களைக் குறைத்துக் கொண்டால் செலவுகள் கட்டுப்படும்.

கடகம்: முக்கிய நண்பர்களைச் சந்தித்து கலந்துரையாடுவீர்கள். வெளியிடப் பயணத்தால் நன்மைகள் உண்டு.

சிம்மம்: உறவினர்கள் உதவிக் கரம் நீட்டுவார்கள். புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும்.

கன்னி: தந்தையின் உடல் நிலையில் கவனம் செலுத்துங்கள். சொத்துகளை உரிய முறையில் பேணுங்கள்.

துலாம்: தொழில் இடத்தில் எதிலும் அவசர முடிவுகளை எடுக்காதீர்கள். உடல், மனம் இரண்டும் சோம்பிக் காணப்படும்.

விருச்சிகம்: கௌரவமாக நடத்தப்படுவீர்கள். எண்ணிய காரியங்களை எளிதில் முடிப்பீர்கள்.

தனுசு: நீங்கள் எதிர்பார்த்த பணத்தொகை கிடைக்கும். எதிரிகளால் நன்மைகள் ஏற்படும் நாள்.

மகரம்: மனதினை அங்குமிங்குமாக அலையவிடாதீர்கள். அதிர்ஷ்டத்தினை நம்பி பணத்தை வீணடிக்காதீர்கள்.

கும்பம்: யாரையும் நம்பி இரகசியங்களை வெளிப்படுத்தாதீர்கள். வீடு வாகனங்களால் தொல்லைகள் உண்டு.

மீனம்: நீங்கள் நினைத்ததை தைரியத்துடன் சாதீப்பீர்கள். தேவைக்கேற்ப பணம் நிறைவினைத் தரும்.

**திதி :** திரயோதசி மு.ப.8.40 வரை பின் சதுர்தசி (தேய்)
**நட்சத்திரம்:** கார்த்திகை பி.ப.3.07 வரை பின் ரோஹிணி
**யோகம் :** சித்த யோகம் பி.ப.3.37 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 5.52– 6.52 மணிவரை
**ராகுகாலம்:** 10.22– 11.52 மணிவரை
**எமகண்டம் :** 2.52- 4.22 மணிவரை
**குளிகை :** 7.22 – 8.52 மணிவரை
**சந்திராஷ்டமம்:** துலாம் ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிர்ஷ்டம்:** பரணி, பூரம், பூராடம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** கார்த்திகை விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# சபாநாயகரை சந்தித்தார் பாராளுமன்ற அபிவிருத்தி தொடர்பான சர்வதேச நிபுணர்







முன்னாள் கனேடிய பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற அபிவிருத்தி தொடர்பான சர்வதேச நிபுணருமான கெவின் டிவொக்ஸ், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று முன்தினம் (14) பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோடாவும் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கொள்கை நிபுணரும் ஆட்சிமுறை தொடர்பான தலைவருமான சந்திரிகா கருணாரத்ன, சபாநாயகரின் வெளிவிவகார ஒருங்கிணைப்புச் செயலாளர் வைத்திய கலாநிதி சமீர யாப்பா அபேவர்தன ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.







**முந்தல் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயத்தின் வருடாந்த வெளிக்கொடி ஏற்றும் நிகழ்வு நேற்று (15) இடம்பெற்றது. இதன்போது பக்தர்கள் கொடிக்கம்பத்துக்கு மஞ்சள் தேய்த்தனர். இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். (படங்கள் : உடப்பு செய்தியாளர்)**

# மாவத்தகம விவசாயிகளுக்கு நிதியுதவி





(இக்பால் அலி)

அரசாங்கத்தின் உரமானியத் திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேயருக்கு 20,000 ரூபா அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இதற்கிணங்க மாவத்தகம கமநல சேவை பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு மாவத்தகம கமநல சேவை மத்திய நிலையத்தில் இடம்பெற்றது. விவசாய உத்தியோகத்தர் பிரியந்த தெவரப்பெரும தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விவசாய இராஜாங்க அமைச்சர் டி. பி. ஹேரத், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுளா திசாநாயக்க, மாவத்தகம பிரதேச செயலாளர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாவத்தகம கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட 1109 ஹெக்டேயர் விவசாயக் காணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




441 விவசாயிகள் இரசாயன மற்றும் சேதனப் பசளைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பற்றுச்சீட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை புதிய விலைக்கு ஏற்ப யூரியா, எம்.ஓ.பி. பசளைகள் இதன்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கர்ப்பிணித்தாய்மாருக்கு பொதிகள் அன்பளிப்பு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)





வருமானம் குறைந்த கர்ப்பிணித் தாய்மாருக்கு சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதியான முக்கிய பொருட்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.

இளம் முஸ்லிம் பெண்கள் மாதர் அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கை கனடா இளம் முஸ்லிம் பெண்கள் மாதர் அமைப்பின் நிதி அனுசரணையில் இவை வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான நிகழ்வு அமைப்பின் தலைவி பவாஸா தாஹா தலைமையில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ தலைமைக் காரியாலயத்தில் 13ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது இலங்கை கனடா இளம் முஸ்லிம் பெண்கள் மாதர் அமைப்பின் தலைவி பெரோஸா காசிம் பயனாளிகளுக்கு பொதிகளை வழங்கி வைத்தார். மூவினத்தையும் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மேற்படி பொதிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அஸார் சமீர், காலித் பாறுக், ஸஹ்ரா தாஹா, கொழும்பு டைம்ஸ் பிரதம ஆசிரியர் ரசூல்தீன் மற்றும் இளம் மாதர் அமைப்பின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூன் 16ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

## பெரமுனவின் சரணாகதி!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தின் பிரதான கட்சியான பொதுஜன பெரமுன தொடர்ந்தும் ஆதரவை வழங்குமென அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பெசில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் அரசாங்க தரப்பு கட்சித் தலைவர்களினால் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே பெசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லா உள்ளிட்ட அமைச்சர்கள் குழு இந்த சந்திப்பில் கலந்துகொண்டது.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த பசில் ராஜபக்ஷ, சில தொழிற்சங்கங்களும் தமது கட்சியைச் சேர்ந்த சில உள்ளூர் அரசியல்வாதிகளும் அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பில் முரண்பாடான நிலையில் கருத்து வெளியிடுவதாகவும், ஆனால், அந்தப் பிரச்சினைகள் எவையும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஆதரவளிக்காத அளவுக்கு தீவிரமானவையல்ல எனவும் தெரிவித்தார்.

கலந்துரையாடல் மூலம் ஒன்றிணைந்து செயற்படும் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் எனவும், அதற்காக மாதத்திற்கு ஒரு நாள் ஜனாதிபதியை நேருக்கு நேர் சந்திப்பது அவசியமானது எனவும் பெசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தான் உட்பட பொதுஜன பெரமுன கட்சி அண்மைக்கால வரலாற்றில் பல ஜனாதிபதிகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளதாகவும், அந்த அனுபவத்தின்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் இல்லாத வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் செயற்பாட்டுப் பணியாளர்கள் இருப்பதாகவும் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

அரசியல் ரீதியாக அழுத்தங்கள் வழங்கப்பட்டால் பாராளுமன்றத்தைக் கலைக்கப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தாரென செய்திகள் வெளிவந்த பின்னர் நடந்த இந்த சந்திப்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சாஷ்டாங்கமாக ரணிலிடம் சரணாகதியாகியிருப்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

ரணிலுக்குத் தொடர்ந்தும் ஆதரவை வழங்குவதாக பெசில் ராஜபக்ஷ கூறியுள்ள உறுதிமொழி அரசியல் ரீதியாக தற்பாதுகாப்பு முறையே தவிர, நிச்சயம் அதில் நேர்மைத்தன்மை இல்லையென்பது அரசியல் புரிந்தவர்களுக்குத் தெரியும். இணக்க அரசியல் செய்யத் தயாராக இருப்பதாகக் கூறும் இதே பொதுஜன பெரமுனவின் செயலர் சாகர காரியவசம், சில தினங்களுக்கு முன்னர் ரணிலை சாடியிருந்தார். தங்களது தயவில்தான் ரணிலின் ஆட்சி தொடர்வதாக அவர் கூறியிருந்தார். அதன் பின்னர் ரணிலின் கூட்டத்தை பொதுஜன பெரமுனவின் மாவட்டத் தலைவர்கள் பகிஷ்கரித்திருந்தனர். அதற்கிடையில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில், பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுக்கு மதிப்பில்லையெனில் அரசுக்கு ஆதரவை வழங்குவதை பரிசீலிக்க நேரிடுமென்று தெரிவித்தார்.

முதலில் மிரட்டிப்பார்ப்பது. பயந்தால் அடக்கிவிடுவது. இல்லையேல் இணங்கிச் செயற்படுவது என்ற கோட்பாட்டில் பொதுஜன பெரமுன செயற்பட்டுள்ளது. இந்த மிரட்டலைக் கண்டு விசனப்பட்டு சில சமயம் பாராளுமன்றத்தை ரணில் விக்கிரமசிங்க கலைப்பாரானால், தங்களின் நிலைமை என்னவாகும் என்பதுவும் பொதுஜன பெரமுனவுக்குத் தெரியாத விடயமல்ல. இப்போது சரணாகதி அரசியலுக்கு பெசில் இறங்கியிருப்பது அந்த அடிப்படையில்தான்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காட்டும் இரட்டை முகத்தை ரணில் அறியாதவரல்லர். அதனால்தான் அக்கட்சியின் இளவயது உறுப்பினர்களை அவர் தன்வசம் அரவணைத்து வைத்திருக்கிறார். பாராளுமன்றக் கலைப்பு என்றொரு தீர்மானம் எட்டப்படுமாயின் மேலும் பலர் ரணிலுடன் சேரும் நிலைமையே இருக்கிறது. தவிர சமூகத்தில் இப்போதும் நிலவும் ராஜபக்ஷ எதிர்ப்பு அலையை பயன்படுத்துவதில் ரணில் சமர்த்தர் என்பது தனிக்கதை.

ஆட்சியை சிறந்த முறையில் முன்னெடுக்க ரணிலுக்கு உதவத் தயாரெனக் கூறும் இதே ஸ்ரீலங்கா பொதுஜன பொதுஜன பெரமுன, இன்னும் சில காலத்தில், அதாவது ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயத்தில் ரணிலைக் கைவிடும் என்பதை இப்போதே இலகுவில் கணித்துவிடக்கூடியதாக இருக்கிறது.

பெரமுனவின் திடீர் பாசத்தையும் உள்வேஷத்தையும் புரியாத அரசியல் பக்குவமற்றவர் அல்லர் ரணில். அடுத்த வருட முற்பகுதியில் ஜே.ஆரின் மருமகன் என்பதைக் காட்டுவார் ரணில் என்பதையே இப்போதைக்குச் சொல்ல முடியும்.

## இன்றைய நாளில்...

- 1911 – ஐ.பி.எம். நிறுவனம் நியூயோர்க்கில் ஆரம்பிக்கப்பட்டது.
  1958 – 1956 ஹங்கேரியப் புரட்சியில் ஈடுபட்ட தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.
- 1976 – தென்னாபிரிக்காவில் சுவெட்டோவில் 15,000 கறுப்பின மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 566 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
- 2010 – பூட்டான், புகையிலைப் பயன்பாட்டை முற்றாகத் தடைசெய்த முதலாவது நாடானது.
- 2012 – ஐக்கிய அமெரிக்க வான்படையின் தானியங்கி 'போயிங் எக்ஸ்-37' விண்ணூர்தி, 469 நாள் பயணத்தின் பின்னர் பூமிக்குத் திரும்பியது.
- 2012 – சீனா 'சென்சூ-9' விண்கலத்தை லியு யங் என்ற பெண் உட்பட மூவருடன் வெற்றிகரமாக ஏவியது.
  2013 – வட இந்திய மாநிலமான உத்தராகண்டத்தில் பெரும் வெள்ளம், நிலச்சரிவுகள் இடம்பெற்றதில் பெரும் அழிவுகள் ஏற்பட்டன.



# நவீனமயமாகும் சீன இராணுவம்!

ஒரு காலத்தில் குப்பைக்கழிவு இராணுவம் என்று வர்ணிக்கப்பட்ட சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் (பி.எல்.ஏ.) இன்று உலகின் மிகச்சிறந்த தொழில்முறையிலான தாக்குதல் படையாக மாறி வருகிறது.

'குறைவான ஆயுதம் - குறைவான படைவீரர்கள்' என்ற கோட்பாடே சீன இராணுவத்தை மேம்படுத்தத் தடையாக இருந்து வந்தது. 1993ஆம் ஆண்டு வரையிலும் கூட சீன இராணுவத்தின் நவீனமயமாக்கும் நடவடிக்கைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டே வந்தன. சீன கம்யூனிச அரசின் நிறுவனரான மா ஓ சேதுங், உட்கட்சித் தலைமைக்கு சவால் வந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வாலும், மாறுபட்ட கொள்கை முரண்பாடுகளால் சிக்கல்கள் நேரிட்டுவிடக் கூடாது என்பதாலும் இராணுவம் மீது உறுதியான பிடியை வைத்திருந்தார்.

மா ஓ சேதுங்குக்குப் பிறகு, சீன அரசின் இராணுவம் குறித்த பார்வையில் மாற்றம் வந்தது. டெங் ஜியோ பிங் ஜனாதிபதியாக இருந்தபோது, இராணுவத்தின் தொழில்முறை முன்னேற்றம் குறித்த அரசின் சந்தேகப் பார்வை குறைந்தது. ஆயினும், இராணுவம் மீதான பிடியை சீன கம்யூனிஸ்ட் கட்சி தளர்த்திக் கொள்ளவில்லை.

1990களில் நடந்த வளைகுடாப் போரும் 1995 - 1996இல் நிகழ்ந்த தாய்வான் நீரிணை விவகாரமும் இராணுவத்தை தொழில்முறையில் மேம்படுத்தியாக வேண்டியதன் அவசியத்தை சீன அரசுக்கு உணர்த்தின. வளைகுடாப் போர் போன்ற சிக்கல்களை எதிர்கொள்ள பி.எல்.ஏவை ஆயத்தமாக்குவதற்காக, ஆயுதங்களின் செயல்திறனைப் பெருக்குதல், அதிநவீன தொழில்நுட்பங்களைக் கையாள்வது ஆகியவற்றின் தேவை உணரப்பட்டது. அப்போது உள்ளூர் போர்களை நவீனக் கட்டுப்பாடுகளுடன் நடத்தலாம் என்ற சிந்தனை காலாவதியானது.

அன்று முதல் சீன இராணுவத்தை வலுப்படுத்தும் ஒருங்கிணைந்த முயற்சிகள் தொடங்கின. 1997ஆம் ஆண்டுக்குப் பிறகு சீன அரசின் நிதிநிலை அறிக்கையில் இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரிக்கப்பட்டது. அதிலும் 2011ஆம் ஆண்டு வரை (ஓராண்டு தவிர) இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடு இரட்டை இலக்க சதவீதத்தில் இருந்தது. அதன் விளைவாக பி.எல்.ஏ. விரைவில் நவீனமயமானது.

சீனாவின் பி.எல்.ஏ. தனக்கென இராணுவ வியூக நெறிமுறைகளை வடிவமைத்துள்ளது. அதுவே இராணுவத்தின் திட்டங்கள், கொள்கைகள் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது. 1993இல் பி.எல்.ஏவின் தலைமைத் தளபதியாக இருந்த ஸாங் வானியான், அப்போதைய இராணுவ வியூகத்தை சுருக்கமாகக் குறிப்பிட்டபோது, "நமது வியூகம் என்பது, நாம் யாருடன் போரிட வேண்டும், எங்கே போரிட வேண்டும், எவ்வாறு போரிட வேண்டும் ஆகிய கேள்விகளுக்கு பதிலளிப்பதாக இருக்க வேண்டும்'' என்றார்.

சீன மக்கள் குடியரசின் படைபலம் குறித்து அமெரிக்க காங்கிரஸ் அவையில் அந்நாட்டின் பாதுகாப்புத் துறையால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்திர அறிக்கையில், பி.எல்.ஏவின் வியூக முறைகளில் பெரும்பங்கைப் பெற்றிருப்பது செயலூக்கமுள்ள தற்காப்பு மட்டுமே எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த செயலூக்கமுள்ள தற்காப்புக் கோட்பாட்டின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:- பி.எல்.ஏ யாரையும் முதலில் தாக்காது. ஆனால், பிறர் தாக்கினால் தகுந்த பதிலடி கொடுக்க இராணுவம் அனுமதிக்கப்படும். அதேபோல், தற்காப்புக்காக முன்னெச்சரிக்கைத் தாக்குதல்களையும் பி.எல்.ஏ. மேற்கொள்ளலாம்.

எல்லைகளில் தனது நிலைகள் ஸ்திரப்படுத்திக் கொள்வதும், அதை அண்டைநாடுகளுக்கு சமிக்ஞையாக வெளிப்படுத்துவதும் அவசியம். எதிரி நாட்டுப் படைகளின் பலவீனங்களை மையப்படுத்தி, நேரமும் சூழலும் ஒத்து வருகையில் தாக்குதல்களை நடத்த பி.எல்.ஏ. அனுமதிக்கப்படும்.

இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில்தான் சீனாவின் இராணுவச் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

1990களுக்கு முன்னர் சீனாவின் இராணுவ பட்ஜெட், தாய்வானின் இராணுவ பட்ஜெட்டை விடக் குறைவாகவே இருந்தது. 1990களின் பிற்பகுதியிலிருந்து, அதன் இராணுவ நிதி ஒதுக்கீடு அதிகரித்தது. இன்று உலக நாடுகளில் இராணுவத்திற்கு அதிகம் செலவு செய்யும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவுக்கு அடுத்ததாக சீனா இருக்கிறது.

இப்பட்டியலில் ஜப்பான், பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் போன்ற நாடுகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது சீனா. இன்றைய சீனாவின் இராணுவ பட்ஜெட், 17 இந்தோ-பசிபிக் நாடுகளின் இராணுவங்களுக்கு அளிக்கப்படும் ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீட்டை விட அதிகம்.

சீன அரசு 2023ஆம் ஆண்டில் பி.எல்.ஏவுக்கு அளித்துள்ள வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் அளவு 224.79 பில்லியன் அமெரிக்க டாலர். (சுமார் ரூ.18,43,278 கோடி). இது கடந்த நிதியாண்டைவிட 7.2 % அதிகம். கடந்த எட்டாண்டுகளாக இதே போன்று ஒற்றையிலக்க சதவீதத்தில் இராணுவ நிதி ஒதுக்கீடு அதிகரித்து வந்துள்ளது. கடைசியாக 2015இல் 10.1 % என்ற இரட்டை இலக்கத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதே சமயம், அறிவிக்கப்பட்ட பட்ஜெட் தொகைக்கும், இராணுவத்தில் செலவு செய்யப்படும் தொகைக்கும் பெருத்த வேறுபாடு இருப்பதாகவும், பட்ஜெட் ஒதுக்கீட்டை விட இருமடங்கு அதிகமாக இராணுவத்திற்குச் செலவு செய்யப்பட்டிருப்பதாகவும் அமெரிக்க பாதுகாப்புத்துறை அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

சீனாவுடன் ஒப்பிட்டால் இந்தியாவின் இராணுவத்திற்கான நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவே. 202324 நிதியாண்டில் இந்திய அரசு இராணுவத்திற்கு ஒதுக்கீடு செய்திருப்பது 72.6 பில்லியன் டாலர் (ரூ.595,320 கோடி) மட்டுமே.

அதிகப்படியான நிதி ஒதுக்கீடு காரணமாக, பி.எல்.ஏ. புதிய திறன்களையும் மேம்பாட்டையும் பெற்று வருகிறது. ஒருங்கிணைந்த ஊடுருவும் தொழில்நுட்பம், துல்லியமான தாக்குதல்களை நிகழ்த்தும் திறன், நீண்ட தொலைவில் உள்ள இலக்குகளை விமானம், கப்பலிலிருந்து தாக்கும் திறன், நெடிய போர்ப் பயண ஏற்பாடு ஆகியவற்றில் பி.எல்.ஏ. நிபுணத்துவம் பெற்று வருகிறது.

ஏற்கெனவே, செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தில் முதலீடு, ஆளில்லா விமானங்கள் (யு.ஏ.வி.), திறன் வாய்ந்த கணினி வலைப்பின்னல் கட்டமைப்பு ஆகியவற்றின் வாயிலாக, உளவுத் தகவல்களை கிரகித்தல், இராணுவச் செயற்பாடுகளைத் திட்டமிடல், போர்க்களத்தில் சூழலுக்கேற்ப முடிவெடுத்தல் ஆகிய பணிகளில் பி.எல்.ஏ. தனது திறமைகளைப் பெருக்கிக் கொண்டுள்ளது.

இதில் சீனாவின் அண்மைக்கால முன்னேற்றமாக, விமானந்தாங்கிக் கப்பல்களை உள்நாட்டிலேயே சிறப்பாக வடிவமைத்திருப்பதைக் குறிப்பிடலாம். பழைய சோவியத் ஒன்றியத்திடமிருந்து பெறப்பட்ட பயன்படுத்தப்பட்ட விமானந்தாங்கிக் கப்பல்களை புதுப்பித்து முதன்முதலாக 'லியாஓனிங்' விமானந்தாங்கிக் கப்பலை 1999களில் சீனா தயாரித்தது. 2017இல், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட 'ஷான்டோங்' விமானந்தாங்கிக் கப்பலை சீனா அறிமுகம் செய்தது.

2022இல் 'பியூஜியன்' என்ற புதிய விமானந்தாங்கிக் கப்பலை சீனா தயாரித்திருக்கிறது. இந்தக் கப்பல், மின்காந்த சக்தியில் இயங்கும் தொழில்நுட்பத்தால் விமானங்களைக் கட்டுப்பட்டுத்தும் வகையில், உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. தாய்வானின் அருகிலுள்ள சீன மாகாணமான பியூஜியனின் பெயரே இந்த விமானந்தாங்கிக் கப்பலுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது.

எதிர்வரும் ஆண்டுகளிலும் இதே வேகத்துடன் பி.எல்.ஏவின் நவீனமயமாக்கம் நடைபெறும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. எனினும், கீழ்க்கண்ட உள்நாட்டு அரசியல், வெளிநாட்டி நிகழ்வுகளின் தாக்கத்தால் இதில் மாற்றம் நிகழவும் வாய்ப்பிருக்கிறது.

முதலாவதாக, தாய்வான் விவகாரம் பி.எல்.ஏவின் நவீன மயமாக்கத்தில் பெரும்பங்கு வகித்து வந்துள்ளது. இந்த விவகாரத்திற்குத் தீர்வு காணப்பட்டுவிட்டால் பி.எல்.ஏவின் முக்கியத்துவம் குறையலாம். எனினும், தாய்வான் விவகாரத்தில் உடனடித் தீர்வுக்கான வாய்ப்புகள் குறைவே. தாய்வான் மீதான சீனாவின் கட்டுப்பாடு நிலவுவது அமைதியான ஒப்பந்தத்தாலா, இராணுவ பலத்தாலா என்பதன் அடிப்படையிலேயே இராணுவத்தின் தேவை மதிப்பிடப்படும்.

இரண்டாவதாக, தாய்வான் நீரிணை விவகாரம் அல்லாத பிற விவகாரங்களும் இராணுவத்தின் தேவையை அதிகரிக்கின்றன. முப்படைகளின் முதல் நிலை, இரண்டாம் நிலைப் பிரிவுகளுக்கு இராணுவ நிதி ஒதுக்கீட்டை முன்னுரிமை அடிப்படையில் முறைப்படுத்துவது அவசியம். குறிப்பாக, இந்திய எல்லையை ஒட்டிய பகுதிகளில் பி.எல்.ஏ. செலுத்தும் கவனம், கொரிய தீபகற்பத்தில் செலுத்துவதைவிட அதிகமாக உள்ளது.

இதற்குப் பொருத்தமாகவே தற்போதைய சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், 'முழுமையான தேசிய பாதுகாப்புக் கருத்து' என்ற கோட்பாட்டை முன்வைத்திருக்கிறார். நாட்டை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியைக் காப்பது, பலதரப்பட்டவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது ஆகியவற்றில் அவர் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இது கிட்டத்தட்ட 1980களில் சோவியத் ரஷ்யாவின் இராணுவம் கொண்டிருந்த திட்டங்களைப் போன்றது. சோவியத் இராணுவத்தில் அப்போது முப்படைகளும் போர்களை நடத்த சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது.

இறுதியாக, எதிர்காலப் போர்முறைகளின் இயல்பே வருங்காலத்தில் இராணுவ நவீநமயமாக்கலைத் தீர்மானிக்கும். 2019ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்ட சீன இராணுவ நெறிமுறைகள், தகவல் போரில் வெல்ல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தன. எனினும், பி.எல்.ஏவின் வியூகம் தற்போது அறிவாற்றல் போரில் தன்னை மேம்படுத்திக் கொள்வதில் இருப்பதாகத் தெரிகிறது. தொழில்நுட்பரீதியான மேம்பாட்டிற்கு பி.எல்.ஏ. தயாராகிறது. இதற்காக, சீனாவின் அறிவியல் - தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்புகளுடன் பி.எல்.ஏ. இணைந்து செயல்படுகிறது. செயற்கை நுண்ணறிவு, ரோபோட்டிக்ஸ், ட்ரோன் தொழில்நுட்பம், ஒலியை விட அதிவேகமாக இயங்கும் ராக்கெட் தொழில்நுட்பம், நானோ தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம் போன்றவற்றில் பி.எல்.ஏ. கூடுதலான கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

**மனீஷ் திவாரி**
*முன்னாள் மத்திய அமைச்சர்*
*(நன்றி - தினமணி )*

## நக்கல் நமசிவாயம்

**பாராளுமன்றத் தேர்தல் தான் முதலில நடக்கப்போகுதாம்... அப்படியெண்டா அதுக்கு மட்டும் காசு இருக்குதாமோ..?**



# களுதாவளை பொருளாதார மத்திய நிலையம் விரைவில் திறக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவிப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

களுதாவளையிலுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை விரைவில் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

களுதாவளைக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை(14) மாலை விஜயம் மேற்கொண்டிருந்த இராஜாங்க அமைச்சர் இதுவரை திறந்து வைக்கப்படாதுள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெத்தினம் உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இராஜாங்க அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் கடந்த 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2018 இல் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

ஆனாலும் இந்நிலையம் இதுவரையில் திறந்து வைக்கப்படாமலுள்ளது. இவ்வாறு அரசாங்கத்தின் நிதி வீணடிக்கப்படுவதை ஏற்கமுடியாது. இதனையே தற்கால இளைஞர்களும் தட்டிக்கேட்கின்றார்கள். எனவே, நாம் இதனை விரைவாகத் திறந்து மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கவேண்டியுள்ளது.

இதனால் இப்பகுதி விவசாயிகளுக்கு பெரிதும் நன்மை கிடைக்க வேண்டும். இந்நிலையத்தை புனரமைப்பதற்கு எமது அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதனை விரைவில் திறந்து வைக்கவுள்ளோம்.

இருந்த போதிலும் இந்நிலையத்தை மேம்படுத்தும் பொறுப்பு இப்பகுதி மக்களின் கைகளிலேயே உள்ளது - எனவும் தெரிவித்தார்.

# இங்கிரியவில் ஆளுமைகளுக்கு விருது

புதிய வானம் வலைக்காட்சியின் விருது வழங்கும் விழா இங்கிரிய, றைகம் கீழ்ப் பிரிவு விபுலானந்தா தமிழ் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

'தமிழன்' நாளிதழின் ஊடக அனுசரணையில் நாளைமறுதினம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் களுத்துறை மாவட்டத்தின் ஆன்மீக செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், கலை இலக்கியவாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

றைகம், விபுலானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் மெய்யநாதன் ஆனந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வை பூமணி அம்மா அறக்கட்டளை, அகலவத்தை, டார்டன்பீல்ட், கணபதி அறநெறி பாடசாலை மற்றும் மலையகத் தேன் மொழி அமைப்பு என்பன ஒன்றிணைந்து நடத்துகின்றன. இந்த விருது வழங்கும் விழாவுக்கான ஊடக அனுசரணையை நமது 'தமிழன்' நாளிதழ் வழங்கவுள்ளமை சிறப்பம்சமாகும்.

# தொட்டவத்தையில் கந்தூரி

பாணந்துறை, தொட்டவத்தை ரௌழதுல் அத்கியா பெரிய பள்ளிவாசலில் 154 ஆவது வருடாந்த ஷாதுலியா மனாகிப் மஜ்லிஸின் இறுதிநாள் வைபவமும் பெரிய கந்தூரியும் நாளை (17) சனிக்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

தொட்டவத்தை பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளரும் வர்த்தகப் பிரமுகருமான ரிஸ்வான் அமீன், பள்ளிவாசல்கள் பரிபாலன சபைத் தலைவர் இம்தியாஸ் ஆகியோரின் இணைத் தலைமையில் பரிபாலன சங்கத்தினால் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பள்ளிவாசலில் இடம்பெற்றுவரும் 154 ஆவது வருடாந்த மனாகிப் மஸ்ஜ்லிஸ் கடந்த 08 ஆம் திகதி பெரிய பள்ளிவாசல் பிரதம பேஷ் இமாம் கலீபதுஷ் ஷாதுலி எம்.ரீ.எம்.இல்யாஸ் தலைமையில் ஆரம்பமாகியமை குறிப்பிடத்தக்கது.

# ஓமான் தூதரகத்தின் இரத்ததான நிகழ்வு





(அஷ்ரப் ஏ. சமத்)

உலக குருதி நன்கொடையாளர் தினத்தை முன்னிட்டு ஓமான் நாட்டின் வெளிநாட்டு அமைச்சின் ஆலோசனைக்கிணங்க ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு இலங்கைக்கான ஓமான் நாட்டுத் தூதுவர் அஹமட் அலி செய்யட் அல் - ராசீட் தலைமையில் நாரஹேன்பிட்டி தேசிய இரத்ததான நிலையத்தில் நேற்றுமுன்தினம் (14) இடம்பெற்றது.

நாரஹேன்பிட்டி தேசிய இரத்ததான நிலையத்தின் பணிப்பாளர் வைத்தியர் லக்ஷ்மன் எதிரிசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தூதரகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

# மருதம் பசுமை இயக்கத்தின் பசுமைப்புரட்சி வேலைத்திட்டம்





இன்றைய உலக வெப்பமயமாதலுக்கு காடழிப்பும் இயற்கைக்கு மாறான மனித செயற்பாடுகளுமே காரணம்.

இந்நிலையில், மரங்களை வளர்த்து அதனூடாக எதிர்கால சந்ததிக்கு ஒரு சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதே மருதம் பசுமை இயக்கத்தின் நோக்கமாகும்.

இதற்கிணங்க மருதம் பசுமை இயக்கம் வவுனியாவில் இதுவரை ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை வீதியோரங்களில் நாட்டியுள்ளதுடன் தொடர்ந்தும் மரக்கன்றுகளை நாட்டி பராமரித்தும் வருகிறது.

2016 ஆம் ஆண்டு ஈச்சங்குளம் கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்த வே. தனபாலசிங்கத்தின் சிந்தனையில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் வீதியோரங்களில் மரங்களை நடும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையில், இத்திட்டத்தை கிராம மட்டத்தில் மட்டுப்படுத்தாது மாவட்டம் சார்ந்து விஸ்தரிக்க வேண்டும் என்ற நோக்கில் மருதம் பசுமை இயக்கம் உருவாக்கப்பட்டது. இவ்வியக்கமானது 2020 ஆம் ஆண்டில் யாழ். நோக்கிய மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்து 14 கிலோ மீற்றருக்கு மரங்களை நட்டு தற்போது பராமரித்து வருகின்றது.

பணிப்பாளர் சபை மற்றும் நிர்வாகக் மருதம் பசுமை இயக்கம் இன்று தாண்டிக்குளத்தில் இருந்து மாந்தை வரையான மரநடுகைத் திட்டத்தையும் இவ்வாண்டு ஆரம்பித்துள்ள நிலையில், யாழ். நோக்கிய மர நடுகைத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தையும் எதிர்வரும் மாதங்களில் ஆரம்பிக்கவுள்ளது.

பல நன்கொடையாளர்கள் இவர்களுக்கு சரீர மற்றும் பொருள் உதவிகளை வழங்கியிருந்தபோதிலும், தொடர்ச்சியாக மரங்களைப் பராமரிப்பதற்கு ஏதுவான நிதிவசதியைத் திரட்டிக்கொள்வதில் மருதம் பசுமை இயக்கம் பெரும் இடையூறுகளைச் சந்தித்து வருவதாக இதன் தலைவர் வே. தனபாலசிங்கம் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, ஒரு மரத்தை 3 வருடங்கள் பராமரிக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கும் பசுமை இயக்கத்தின் தலைவர் ஒரு மரத்துக்கு 1,800 ரூபா செலவாகுவதாகவும் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, மக்கள் இவ்வாறான திட்டங்களுக்கு ஆதரவு வழங்காது பின்னிற்கின்றமையானது பெரும் துர்ப்பாக்கியம் எனத் தாம் கருதுவதாகவும் மரங்களின் முக்கியத்துவம் தொடர்பாக எமது பிரதேச மக்களுக்கு தெளிவூட்டப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.


# வாகனங்கள் ஏல விற்பனை – கொட்டாவ

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| SP BCT-09XX | TVS | ZEZT |
| NW BEQ 07XX | HONDA | DIO |
| WP BGZ-84XX | YAMAHA | RAY ZR |
| WP BGM-42XX | YAMAHA | RAY ZR |
| CP BDH-11XX | HERO | DASH |
| SP BHF-64XX | HONDA | GRAZIA |
| WP BFJ-97XX | YAMAHA | RAY ZR |
| WP BEZ-68XX | YAMAHA | RAY ZR |
| WP BDL-56XX | BAJAJ | PULSAR |
| WP BHD-40XX | HERO | MAESTRO EDGE |
| CP BFY-86XX | YAMAHA | FZ |
| WP BEZ-68XX | YAMAHA | RAY ZR |
| WP BDL-56XX | BAJAJ | PULSAR |
| WP BHD-40XX | HERO | MAESTRO EDGE |
| CP BFY-86XX | YAMAHA | FZ |
| WP BGU-17XX | TVS | APACHE RTR |
| NC BEL-88XX | YAMAHA | RAY ZR |
| CP BET-55XX | BAJAJ | PULSAR 150 NS |
| NP BIS-15XX | YAMAHA | RAY ZR |
| WP BFC-53XX | HONDA | DIO |
| WP BFJ-43XX | HONDA | DIO |
| UP BFU-85XX | HONDA | DIO |
| SG BIH-01XX | YAMAHA | RAY ZR |
| WP BER-07XX | HONDA | DIO |
| NC BHE-59XX | BAJAJ | PULSAR 200 |
| SG BEB-16XX | HONDA | DIO |
| WP HZ-37XX | BAJAJ | 2stroke |
| WP BIL-71XX | YAMAHA | FZ VERSION 03 |
| WP BDD-47XX | HERO | PLESURE |
| WP BFO-08XX | DEMARK | DZM 200 |
| WP BEF-40XX | HONDA | DIO |
| NW BEU-04XX | YAMAHA | RAY ZR |
| WP BGW-13XX | YAMAHA | FZ |
| WP BIN-03XX | TVS | NTORQ |
| WP BFJ 48XX | HERO | HUNK |
| CP BHS-49XX | YAMAHA | FZ |
| WP BGL-64XX | HONDA | DIO |
| WP BHB-46XX | TVS | NTORQ |
| SG BIK-69XX | YAMAHA | RAY ZR |
| WP BFI-26XX | YAMAHA | FZ VERSION |
| WP BFU-03XX | HONDA | DIO |
| WP BIN-76XX | TVS | NTORQ |
| WP BGM-31XX | HONDA | DIO |
| WP BBW-20XX | BAJAJ | PULSAR 150 |
| WP BHT-38XX | YAMAHA | FZ |
| WP BGT-09XX | HONDA | DIO |
| CP BCV-26XX | HERO | PLESURE |
| WP BBM-01XX | YAMAHA | FZ |
| WP BFA-38XX | HONDA | DIO |
| WP BFH-44XX | HONDA | DIO SCV 110 |
| WP BIP-48XX | YAMAHA | FZ-S VER 3.0 |
| WP BIX-14XX | HONDA | GRAZIA APPS |
| SG BHQ 77XX | YAMAHA | RAY-ZR |
| WP BFT 59XX | HONDA | DIO SCV 110 |
| WP BBF-65XX | BAJAJ | 4stroke |
| WP BIC-95XX | YAMAHA | RAY ZR |
| WP BEU-76XX | BAJAJ | PULSAR 150 |
| SG BHO-20XX | HONDA | DIO |
| UP BGL-04XX | HONDA | DIO |
| WP BGS-23XX | HONDA | DIO |
| WP BCU-64XX | HONDA | DIO |
| WP BDP-42XX | HONDA | DIO |
| WP BEU-80XX | YAMAHA | RAY ZR |
| SG QS 30XX | BAJAJ | 4stroke |
| CP BGH-31XX | HONDA | DIO |
| SG BIL-51XX | YAMAHA | STRRET RALLY |
| SG BCQ-10XX | BAJAJ | PULSAR 150 |
| WP BGY-33XX | HERO | MAETRO EDGE |
| WP BIS-56XX | HONDA | DIO |
| WP BDY 60XX | HONDA | DIO |
| WP BGX-44XX | HONDA | DIO |
| WP BEB-60XX | TVS | WEGO |
| WP BHI-95XX | TVS | NTORQ |
| SG BHX-00XX | HONDA | DIO |
| WP BHB-58XX | HONDA | DIO |
| WP BEY-69XX | HONDA | DIO |
| WP BFP-22XX | HONDA | DIO |
| WP BHL-89XX | HONDA | DIO |
| SP BDQ-10XX | HONDA | DIO |
| WP BIM-84XX | YAMAHA | FZ-S VER 2 |
| WP BGQ-87XX | YAMAHA | FZ |
| WP BIA-34XX | HONDA | DIO |
| WP BHB-15XX | HONDA | DIO |
| WP BIN-90XX | HONDA | GRAZIA |
| WP BFX-74XX | HONDA | DIO |
| WP BDM-05XX | HONDA | DIO |
| WP BHC-97XX | TVS | NTORQ |

| வாகன இல | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NC BCQ-16XX | BAJAJ | PULSAR |
| WP BEF-18XX | HONDA | DIO |
| SG BGJ-71XX | YAMAHA | RAY ZR |
| WP BID-17XX | HONDA | NAVI |
| WP BGJ-81XX | HONDA | DIO |
| SG BGF-75XX | HONDA | DIO |
| SG BEY-04XX | BAJAJ | PLATINA |
| WP BIB-85XX | HONDA | NAVI |
| WP BFA-51XX | HONDA | DIO |
| WP BIO-73XX | HONDA | DIO |
| WP BGP-98XX | HONDA | DIO |
| WP BHC-05XX | YAMAHA | FZ |
| WP BGV-56XX | HONDA | DIO |
| WP BHY-48XX | TVS | NTORQ |
| WP BIN-17XX | YAMAHA | STRRET RALLY |
| WP BER-69XX | DEMARK | TROPICA |
| WP BGE-37XX | BAJAJ | PULSA NS 160 |
| SP BHY-26XX | TVS | NTORQ |
| WP BIW-99XX | TVS | NTORQ |
| NW BCM-51XX | TVS | METRO |
| CP BBH-82XX | BAJAJ | PULSAR 150 |
| WP BFC-64XX | HONDA | DIO SCV 110 |
| SP BDY-30XX | HONDA | DIO SCV 110 |
| WP BHV - 54XX | HONDA | DIO SCV 110 |
| WP BIT - 58XX | TVS | NTORQ |
| WP BIP-23XX | TVS | NTORQ |
| WP BHY-06XX | YAMAHA | FZ-S VER 3.0 |
| WP BHQ-99XX | HONDA | DIO SCV 110 |
| WP BFT-02XX | YAMAHA | FZ-VER 2.0 |
| WP BIP-81XX | HONDA | DIO SCV 110 |
| WP BHL-19XX | HONDA | DIO SCV 110 |
| WP BDO-88XX | BAJAJ | CT 100 |
| WP BHG-63XX | HONDA | DIO SCV 110 |
| WP BCU-84XX | HONDA | DIO SCV 110 |
| WP BFI-61XX | HONDA | DIO SCV 110 |
| WP BEH-74XX | HONDA | DIO SCV 110 |
| WP BFB-38XX | HONDA | DIO SCV 110 |
| WP BFH-80XX | YAMAHA | RAY-ZR |
| CP BFO-43XX | YAMAHA | RAY-ZR |
| WP BIH-72XX | HONDA | DIO SCV 110 |
| WP BER-13XX | HONDA | DIO SCV 110 |
| WP BEC-21XX | BAJAJ | DISCOVER 125 |
| WP BIK - 78XX | HONDA | GRAZIA |
| WP BHR-76XX | HONDA | GRAZIA |
| WP BDU-11XX | HONDA | DIO SCV 110 |
| WP BFH-55XX | HONDA | DIO SCV 110 |
| WP QS-97XX | BAJAJ | 4stroke |
| CP QO-77XX | BAJAJ | 4stroke |
| WP QE-18XX | BAJAJ | 4stroke |
| CP QQ-55XX | BAJAJ | 4stroke |
| SP QM-41XX | BAJAJ | 4stroke |
| SP GP-20XX | BAJAJ | 2stroke |
| UP HI-47XX | BAJAJ | AUTO RE 2 STROKE |
| SG QJ-71XX | BAJAJ | 4stroke |
| CP QM-61XX | BAJAJ | 4stroke |
| CP QQ-31XX | BAJAJ | 4stroke |
| CP ABL-60XX | PIAGIO | APE |
| SP QK-33XX | BAJAJ | 4stroke |
| UP ABE-66XX | BAJAJ | 4stroke |
| UP YX-34XX | BAJAJ | 4stroke |
| WP QR-79XX | BAJAJ | 4stroke |
| CP QU-08XX | BAJAJ | 4stroke |
| WP AAL-40XX | BAJAJ | 4stroke |
| WP GX-88XX | BAJAJ | 2stroke |
| WP QP-44XX | BAJAJ | 4stroke |
| WP QT-36XX | BAJAJ | 4stroke |
| CP QL-82XX | BAJAJ | 2stroke |
| EP HE-02XX | BAJAJ | 4stroke |
| CP QU-01XX | BAJAJ | 4stroke |
| CP QU 47XX | BAJAJ | 4stroke |
| CP QP-52XX | BAJAJ | 4stroke |
| WP GH-95XX | BAJAJ | 2stroke |
| CP QX-22XX | BAJAJ | 4stroke |
| SG QW-60XX | BAJAJ | 4stroke |
| CP QU-20XX | BAJAJ | 4stroke |
| WP YN-54XX | BAJAJ | 4stroke |
| WP QA-38XX | BAJAJ | 2stroke |
| WP QJ-39XX | BAJAJ | 4stroke |
| WP AAZ-05XX | BAJAJ | RE |
| UP QW-96XX | BAJAJ | AR4S-UG |
| SP CBI - 90XX | JAGUAR | XF S |
| WP JC-41XX | NISSAN | MARCH |
| 14 SRI-75XX | MAZDA | FAMILIA |
| WP CAX-21XX | RENULT | KWID |
| 13-90XX | HONDA | CIVIC |
| WP ZB-17XX | JCB | 3CX |
| UP PV-07XX | DFSK | EQ1020DR |
| 227-30XX | MAZDA | TITAN |

**இல. 17/1, கொட்டாவை, ஹொரணை வீதியின் பிங்ஹேன சந்தியில் உள்ள வாகன சாலையில் 2023 ஜூன் 20/21 ஆம் திகதிகளில் (காலை 8.30 முதல் பிற்பகல் 4.30 வரை) பார்வையிடலாம்.**

**எந்த வாகனத்தையும் வாகன சாலையிலிருந்து மீளப் பெறும் அதிகாரம் முகாமைத்துவத்துக்கு உண்டு.**

**ஏல விற்பனைத் திகதி 22 ஜூன் 2023/ நேரம் காலை 9.30**

வருகை தருபவர்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுதல் அவசியம். ❋ நிபந்தனைகளுக்குட்பட்டது

**விஸ்வா-0774787096**

**துரித அழைப்பு:0717807788 வட்ஸப்-0710356125**

ANA AUCTIONEER
Black Tie Service with True Aloha!
ඒ එන් අල්ගෙවත්ත ඔක්ෂනිය(ර්)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com

AMF
அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி. தலைமை அலுவலகம்,
146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

## மோட்டார்சைக்கிள் சந்தை – மாத்தறை

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| SP BHX-12XX | YAMAHA | FZ |
| SP BEG-06XX | BAJAJ | PULSAR |
| SP BGG-73XX | HERO | MAESTRO EDGE |
| SP BFN-06XX | HERO | MAESTRO EDGE |
| SP BIJ-07XX | HONDA | DIO |
| SP BEV-41XX | YAMAHA | FZ |
| SP BDT-45XX | BAJAJ | PULSAR |
| SP BHU-44XX | YAMAHA | FZ |
| SP BDY-79XX | YAMAHA | FZ |
| WP BCM-96XX | BAJAJ | PULSAR |
| SP BHW-21XX | YAMAHA | RAY ZR |
| SP BGS-00XX | YAMAHA | RAY ZR |
| SP BER-42XX | HONDA | DIO |
| SP BFH-02XX | HONDA | DIO |
| SP BDQ-09XX | HONDA | DIO |
| SP BGI-04XX | YAMAHA | FZ |
| SP BGV-40XX | HONDA | DIO |
| SP BFO-75XX | YAMAHA | RAY ZR |
| SP BGU-87XX | HONDA | DIO |
| SP BEC-49XX | BAJAJ | PULSAR |
| SP BGS-77XX | YAMAHA | RAY ZR |
| SP BFS-97XX | HONDA | DIO |
| SP BGV-28XX | HONDA | DIO |
| SP BHI-94XX | HONDA | DIO |
| SP BCE-44XX | BAJAJ | DISCOVER 125 |
| SP BCV-90XX | HONDA | DIO |
| SP BEQ-65XX | YAMAHA | FZ |
| SP BGE-90XX | HONDA | DIO |
| SP BFH-55XX | HONDA | DIO |
| SP- BIR-59XX | HONDA | DIO |
| SP BDT-48XX | BAJAJ | PULSAR |
| SP BEG-47XX | HONDA | DIO |
| SP BFI-09XX | YAMAHA | RAY ZR |
| SP BDP-98XX | YAMAHA | FZ |
| SP BHQ-98XX | HONDA | DIO |
| SP BEA-89XX | HONDA | DIO |

இடம்:–இல: 578, அனகாரிக தர்மபால மாவத்தை,மாத்தறை

விற்பனை திகதி:–20.06.2023 காலை 10.00 மணிக்கு

சாமர :– 0710773710 விஸ்வா:–0774787096

## மோட்டார்சைக்கிள் சந்தை – அநுராதபுரம்

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NC BIL-87XX | HONDA | DIO |
| NC BEZ-99XX | HONDA | DIO |
| NC BIV-67XX | HONDA | DIO |
| NW BHZ-08XX | YAMAHA | RAY ZR |
| NC BGW-39XX | YAMAHA | RAY ZR |
| NC BDM-84XX | BAJAJ | PLATINA |
| NC BGE-49XX | HONDA | DIO |
| NC BFN-27XX | TVS | WEGO |
| WP BIN-27XX | HONDA | DIO |
| NC BHG-94XX | TVS | NTORQ |
| NC BFA-24XX | DEMARK | SPARK |
| NC BII-56XX | TVS | NTORQ |
| NW BIU-74XX | YAMAHA | FZ |
| NC BHA-56XX | BAJAJ | PULSER |
| NC BFV-58XX | BAJAJ | CT 100 |
| UP BIK-96XX | HONDA | DIO |
| EP BHC-25XX | HONDA | DIO |
| NP BFO-29XX | YAMAHA | FZ |
| NC QA-45XX | BAJAJ | RE 04 |
| NC BCJ-66XX | HONDA | DIO |
| NC BHP-44XX | BAJAJ | DISCOVER |
| NC BHD-58XX | HONDA | DIO |
| NC BGU-46XX | HONDA | TWSTER |
| NC BGG-22XX | HONDA | DIO |
| NW BIM-81XX | YAMAHA | RAY ZR |
| NC BHY-50XX | YAMAHA | FZ |
| NC BHN-67XX | YAMAHA | RAY ZR |
| NP BHI-97XX | BAJAJ | PULSAR 200 NS |
| NP BHY-40XX | YAMAHA | RAY-ZR |
| NC BFE-52XX | HERO | PLEASURE |
| NW BJB-46XX | YAMAHA | RAY-ZR |
| NW BBT-25XX | BAJAJ | CT 100 |
| NW BIL-87XX | HONDA | DIO SCV 110 |
| NC BCL-93XX | HONDA | DIO SCV 110 |
| NC BIC-46XX | HONDA | DIO SCV 110 |

இடம்:–இல: 47/49,ஜயாவெவ வீதி, யாழ்ப்பாண சந்தி, அநுராதபுரம்

விற்பனை திகதி:–24.06.2023 காலை 10.00 மணிக்கு

விஸ்வா :– 0774787096 தரிந்து:–0773147609

## மோட்டார்சைக்கிள் சந்தை – நாரம்மல

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NW BFH-29XX | HONDA | DIO |
| NW BFR-52XX | HONDA | DIO |
| NW BIB-41XX | HONDA | DIO |
| NW BFS-94XX | HONDA | DIO |
| NW BHL-39XX | HONDA | |
| NW BEE-23XX | YAMAHA | FZ-S |
| WP BDM-78XX | HONDA | DIO |
| WP BDQ-80XX | HONDA | DIO |
| WP BDV-48XX | HONDA | DIO |
| WP BFE-35XX | HONDA | DIO |
| WP BFG-89XX | HONDA | DIO |
| NW BFS-25XX | HONDA | DIO |
| NW BCH-49XX | YAMAHA | RAY ZR |
| WP BGA-22XX | HONDA | DIO |
| NW BEW-20XX | BAJAJ | PULSAR 150 |
| NW BAH-96XX | BAJAJ | PULSAR 135 |
| NW BIU-91XX | HONDA | DIO |
| NW BDN-03XX | BAJAJ | CT 100 |
| WP BEX-89XX | HONDA | DIO |
| NW BEK-48XX | BAJAJ | PULSAR 150 |
| NW BDC-71XX | HERO | PLEASURE |
| CP BIN-31XX | HONDA | DIO |
| NW BDZ-21XX | HONDA | DIO |
| NW BGV-90XX | HONDA | DIO |
| NW BFS-28XX | BAJAJ | PULSAR 150 |
| NW BDO-76XX | BAJAJ | PULSAR 150 |
| WP BFC-02XX | HONDA | DIO |
| WP BHT-09XX | TVS | NTORQ |
| SP BIP-58XX | YAMAHA | RAY-ZR |
| WP BGQ-11XX | HONDA | DIO |
| NW HV-17XX | BAJAJ | RE 2 STROKE |
| NW BHL-33XX | HONDA | DIO |
| NW BEJ-49XX | HONDA | DIO |
| NW BEM-48XX | BAJAJ | PULSAR 150 |
| NW BEI-36XX | HONDA | DIO |
| NW BIE-81XX | HONDA | DIO |
| NW BDT-29XX | BAJAJ | PULSAR 150 |
| NW BER-70XX | BAJAJ | CT 100 |
| NW BET-28XX | HONDA | DIO |
| NW BHS-62XX | YAMAHA | FZ-VER 2.0 |
| NW BEQ-76XX | HONDA | DIO |
| NC BCV-03XX | HONDA | DIO |
| NW BHS-69XX | HONDA | DIO |
| NW BGU-28XX | HONDA | DIO |
| NW BIE-40XX | YAMAHA | RAY-ZR |
| NW BEX-67XX | HONDA | DIO |
| NW BHH-29XX | HONDA | DIO |
| NW BFZ-23XX | HONDA | DIO |
| NW BHM-10XX | YAMAHA | RAY-ZR |
| NW BHI-70XX | HONDA | DIO |
| NW BHK-47XX | HONDA | DIO |
| NC BHM-84XX | HONDA | DIO |
| NW BFY-95XX | BAJAJ | PULSAR 150 |
| NW BGS-16XX | HONDA | DIO |
| NW BDH-14XX | BAJAJ | PLATINA |
| NW BFX-66XX | HONDA | DIO |
| NW BEX-87XX | HONDA | DIO |
| NW BGA-27XX | HONDA | DIO |
| NW BDI-02XX | BAJAJ | CT 100 |
| NW QG-04XX | BAJAJ | AUTO RE 2 |
| NW BGN-52XX | HONDA | DIO |
| NW BFL-65XX | HONDA | DIO |
| NW BIF-81XX | HONDA | DIO |
| NW BGB-03XX | HONDA | DIO |
| NW BFV-09XX | HONDA | DIO |
| NW BFD-57XX | HONDA | DIO |
| NW BHG-29XX | HONDA | DIO |
| NW BEM-34XX | TVS | wego |
| NW BGV-50XX | HONDA | DIO |
| NW BDB-94XX | HONDA | DIO |
| NW BHR-31XX | HONDA | DIO |
| NW BIG-15XX | HONDA | DIO |
| NW BHV-84XX | BAJAJ | PULSER |
| NW BIK-14XX | HONDA | DIO |

இடம்:–இல: 91, குருநாகல் வீதி, நாரம்மல

விற்பனை திகதி:–28.06.2023 காலை 10.00 மணிக்கு

சிரங்க:– 0710773722 விஸ்வா:–0774787096

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

AMF
அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

# அதிகாரிகள் சமூக சிந்தனையோடு செயற்பட வேண்டியது அவசியம்

## ஊர்காவற்றுறை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு







மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற சந்தர்ப்பங்களிலும் அவற்றுக்கான பயனாளர்களைத் தெரிவு செய்கின்ற போதும் எமது மக்களின் நலன்கள் சார்ந்த சமூக சிந்தனையோடு அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாக நேற்று(15) இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. அதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேசமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளங்கண்டு அவற்றை ஆராய்ந்து தீர்வுகாணும் நோக்கில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் போக்குவரத்து, விவசாயம், கால்நடை, குடிநீர் விநியோகம், கடற்றொழில் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற காரைநகர் - ஊர்காவற்றுறைக்கிடையிலான கடல் பாதை செயலிழந்திருப்பதால் அதனைத் திருத்தி சேவையில் ஈடுபடுத்தும் வரையில் தனியார் படகுகளை வாடகைக்கு அமர்த்தி பொது மக்களுக்கான போக்குவரத்து சேவையை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வீதிப் போக்குவரத்து ஆணைக்குழுவிடம் தெரிவித்ததுடன், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த சேவை இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறு பிரதேச செயலாளரையும் கேட்டுக் கொண்டார்.

அதேபோன்று, பிரதேசத்தில் உள்ள இறைச்சிக் கடைகள் மற்றும் உணவகங்களை திடீர் சோதனைக்குட்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பொதுச் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கால்நடைகள் திருடப்பட்டு இறைச்சிக்கு வெட்டப்படுவதைத் தடுக்கும் நோக்கிலேயே குறித்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, தீவகங்களுக்கிடையிலான போக்குவரத்துக் கட்டணங்களை மீளாய்வு செய்தல், குடிநீர் விநியோகத்தை உறுதிப் படுத்தல் போன்ற விடயங்களும் பிரஸ்தாபிக்கப் பட்டதுடன் ஏனைய விடயங்களை மிக விரைவில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

# ஹொரேத்துடுவையில் ஊடகப் பயிற்சி முகாம்





(அஷ்ரப் ஏ சமத்)

களுத்துறை கல்வி வலயத்துக்குட்பட்ட மொறட்டுவை, ஹொரேத்துடுவை முஸ்லிம் வித்தியாலயத்தில் ஊடகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அதுதொடர்பான பயிற்சி முகாமொன்றும் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் எஸ்.எச். முத்தலீப் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் உதவி அதிபர், ஆசிரியர்கள், உலமாக்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் மற்றும் ஊடகப் பயிற்சி முகாமுக்கு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். இதன்போது குறித்த மாணவர்களுக்கு பாடசாலை மட்ட ஊடக அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# றிஸ்வி முப்திக்கு "ஷேகு ஸ்ரீ லங்கா" பட்டம்



அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் அல் - ஆலிம், அல் - முஃப்தி எம்.ஐ.எம். றிஸ்வி, "ஷேகு ஸ்ரீ லங்கா" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

புத்தளம் - தில்லையடி முஹாஜிரீன் அரபுக் கல்லூரியின் இரண்டாவது அல் - ஆலிம் மற்றும் அல் - ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா கடந்த 11ஆம் திகதி இடம்பெற்றது. அந்நிகழ்வின போதே அவருக்கு மேற்குறித்த பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இச்சிறப்பு நிகழ்வில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன், கல்லூரி சார்பாக பட்டத்தை வழங்கினார்.

இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் மௌலவி முபாரக் அல் - ரஷாதி, புத்தளம் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். எச்.எம். நவவி, புத்தளம் மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம், ஹனீப் பாய், முஹம்மத் நிஸாம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இரத்ததானம் வழங்கி சாதனை; துரைமணி ரமணனுக்கு விருது



உலக குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு கொழும்பு தேசிய இரத்த வங்கி மத்திய நிலையத்தில் கௌரவிப்பு நிகழ்வொன்று நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இதுவரை 88 தடவைகள் இரத்ததானம் வழங்கி சாதனை படைத்த நயினாதீவைச் சேர்ந்த துரைமணி ரமணன் தேசிய ரீதியாக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# ஒளி, ஒலிபரப்பு அதிகாரசபைச் சட்டமூலம்: ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டல்





(எம்.நசார்)

அரசாங்கத்தினால் கொண்டுவர உத்தேசிக்கப் பட்டுள்ள ஒளி- ஒலிபரப்பு அதிகார சபைச் சட்டமூலம் தொடர்பாக பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு கொழும்பு -7, ஹெக்டர் கொப்பேகடுவ மத்திய நிலையத்தில் நேற்றுமுன்தினம் (14) இடம்பெற்றது.

உரிமைகளுக்கான ஊடகவியலாளர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒளி-ஒலிபரப்பு அதிகாரசபைச் சட்டமூலம் தொடர்பாக பேராசிரியர் ரொஹான் சமரவீர விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

# நாணய மாற்று விதம் (15.06.2023)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 210.8472 | 224.9709 |
| கனேடியன் டொலர் | 231.7384 | 247.9512 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.7553 | 46.3823 |
| யூரோ | 335.9432 | 356.9234 |
| ஜப்பான் யென் | 2.2049 | 2.3396 |
| சிங்கப்பூர் டொலர் | 230.7205 | 245.9947 |
| ஸ்ரேலிங் பவுன் | 392.7211 | 417.0095 |
| சுவிஸ் பிராங்க் | 342.0369 | 366.4402 |
| ஐ.அ. டொலர் | 311.6057 | 328.9272 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 818.2785 |
| குவைட் | குவைட் தினார் | 1,004.1758 |
| ஓமான் | ஓமான் றியால் | 801.2852 |
| கட்டார் | கட்டார் றியால் | 84.6120 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 82.2500 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 83.9912 |

# மன்னாரில் சிறுவர் பராமரிப்பு நிலையம் திறப்பு







(மன்னார் நிருபர்)

உலக வங்கியின் நிதியுதவியில் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல்கள் அமைச்சின் ஊடாக கடந்த ஆண்டு மன்னாரில் நிர்மாணிக்கப்பட்ட பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையத் திறப்பு விழா நேற்றுமுன்தினம்(14) இடம்பெற்றது.

இதன்போது மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் சிறுவர் பராமரிப்பு நிலையத்தை திறந்து வைத்தார்.

வேலைக்குச்செல்லும் பெண்கள், வேறு மாவட்டங்களில் பணிபுரிவோர், தாய் தந்தை இருவரும் பணிபுரிவோர் ஆகியோரின் நலன் கருதியே மேற்படி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டி மெல், சிறப்பு விருந்தினர்களாக உதவி மாவட்ட செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி, மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்,மன்னார் நகரசபைச் செயலாளர், அரச ஊழியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த சிறுவர் பராமரிப்பு நிலையம் புனித ஜோசப்வாஸ் சபை அருட்சகோதரிகளினால் பராமரிக்கப்படவுள்ளது. 20 பிள்ளைகளை ஒரே நேரத்தில் கவனிக்கக்கூடிய வசதியுடன் குறித்த நிலையம் அமைந்துள்ளது.

இந்நிலையத்துக்கு ஆறுவயதுக்குட்பட்ட பிள்ளைகள் நிபந்தனைஅடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் டக்ளஸுடன் பயிற்சி ஆசிரியர்கள் சந்திப்பு





யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 2019 ஆம் ஆண்டு கற்கைநெறிகளுக்காக உள்வாங்கப்பட்ட ஆசிரியர்கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது பயிற்சி ஆசிரியர்கள் எதிர்கொண்டுள்ள பாடவியல் சம்பந்தமான சவால்கள் தொடர்பாக எடுத்துரைத்தனர்.

குறித்த விடயம் தொடர்பாக கல்வியமைச்சர் சுசில் பிரேம்ஜெயந்த மற்றும் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பிரஸ்தாபித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த ஆசிரியர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு சாத்தியமான வழிவகைகள் தொடர்பாக ஆராய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு மண்முனை வடக்கு மட்டக்களப்பு நகர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு யோகா விழிப்புணர்வூட்டும் நிகழ்வு பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நிர்வாக உத்தியோகத்தர் தவலோஜினி சந்திரமோகன் தலைமையில் புதன்கிழமை(14) இடம்பெற்றது. இதில் வளவாளராக டாக்டர் ஜே. பாஸ்கரன் பங்கேற்று உடல், உள ரீதியாக ஆற்றுப்படுத்தும் யோகா பயிற்சிகளை வழங்கி பங்குபற்றுனர்களைப் பயிற்றுவித்தார். இந்நிகழ்வு பிரதேச செயலக சுதேச வைத்திய அபிவிருத்தி உத்தியோகத்தரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மட்டக்களப்பு)

# சாய்ந்தமருதில் களிகம்பு பயிற்சிப் பட்டறை



(பொலிவேரியன், மாளிகைக்காடு செய்தியாளர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் சாய்ந்தமருது பிரதேச செயலகம் இணைந்து நடத்திய களிகம்பு பயிற்சிப் பட்டறை வியாழக்கிழமை(15) சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது கலாசார உத்தியோகத்தர் எஸ். சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகவும் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முஆபிகா கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சாய்ந்தமருது பிரதேசத்தில் இருக்கின்ற மிகப் பிரபலமான கோலாட்ட குழுவான முஹம்மதிய்யா கோலாட்டக் குழு மற்றும் மருதூர் தக்வா கோலாட்டக் குழு ஆகிய இரண்டு குழுக்களுக்கிடையில் இருக்கின்ற மாணவர்களின் கலைத்திறமைகளும் அதனோடு மாவடிப்பள்ளி வளர்பிறை முஸ்லிம் பாரம்பரிய கலாசார கலை மன்ற மாணவர்களின் சிலம்பாட்டம், வால் வீச்சு, லங்ஜக், குங்பு, சீனடி என்பனவும் இதன்போது அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச்.சபீகா, மற்றும் பொறுப்பதிகாரி யூ.கே.எம்.றின்ஸான், அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.நௌஷாத், அபிவிருத்தி சங்க செயலாளர் அஸ்வான் மௌலானா, அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சபானா உட்பட அண்ணாவிமார்களான எம்.ஐ.அலாவுதீன் மற்றும் அஸ்மீர், இஸ்ஸதீன் மற்றும் சிலம்பாட்ட பயிற்றுவிப்பாளர் ஏ.சுப்ஹான் அக்பர், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு நிகழ்வை கண்டு களித்தனர்.

# எதிர்காலத்தில் நாட்டை வளப்படுத்துவது மாணவர்களே

## அக்கறைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஹம்ஸா

(கோணாவத்தை செய்தியாளர்)

எதிர்காலத்தில் இந்த நாட்டை வளப்படுத்துகின்ற செல்வங்களான மாணவர்களை மாணவச் செல்வங்கள் என்று அழைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என அக்கரைப்பற்று நீதவான், மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் சமுதாயசார் சீர்திருத்த திணைக்களத்தின் பங்களிப்புடன் நடைபெற்ற போதைப்பொருள் பாவனை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மாவட்ட நீதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ஏ.பீ.முஜீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனித்தனி திறமையும் ஆற்றலும் இலட்சியமும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில், அந்த இலட்சியத்தை சிதைக்கின்ற செயற்பாடுகள் மிகக் கச்சிதமாக செயற்படுத்தப்பட்டு வருவதையறிந்து பல சந்தர்ப்பங்களில் நான் கவலைப் பட்டிருக்கின்றேன்.



எனது அனுபவத்தில் பல நீதிமன்றங்களில் மாணவர்களை சந்தேக நபர்களாக முன்னிலைப்படுத்துகின்றபோது அவர்களுடன் உரையாடியிருக்கின்றேன். அவர்களது குடும்ப நிலைமை, வறுமை, கெட்ட நண்பர் களின் சகவாசம் போன்றன அவர் களை தீய செயல்களுக்கிட்டுச்சென்றிருப்பதை அறிய முடிந்தது. உங்களில் பலர் வைத்தியர்களாகவும் சட்டத்தரணிகளா கவும் பொறியியலாளர்களாகவும் ஏன் நீதிபதிகளாகக்கூட வர முடியும். அதை சிதைப்பதற்கு ஒரு குழுவினர் மாபியாவாக செயற்பட்டுக் கொண்டிருப்பதும் அதனால் வரும் அபாயத்தைப்பற்றி அறிந்திருக்கவும் வேண்டும்.

ஒவ்வொருவரும் பெரும் கனவுகளை காண வேண்டும். இருக்கின்ற இலட்சியத்தை அடைவதற்கு அந்தக் கனவுகளை நனவாக்கும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் இவ்வாறான அபாயங்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

நிகழ்வில் சமுதாயசார் சீர்த்திருத்த உத்தியோகத்தர் ஏ.எம்.நிசார், சேவைப் பரிசோதகர் எம்.எஸ். முஹம்மட், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்ள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி செயலமர்வு



(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகள் உள்ளிட்ட முஸ்லிம் பாடசாலைகளின் மாணவத் தலைவர்களுக்கான ஒரு நாள் தலைமைத்துவப் பயிற்சி செயலமர்வு வியாழக்கிழமை(15) அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் கல்வியமைச்சின் முஸ்லிம் தேசிய பாடசாலைகளுக்கான பணிப்பாளர் மேஜர் என்.ரி.நசுமுடீன் மற்றும் அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிப்பாளர் அஷ்-ஷெய்க் ஏ.எம்.றகுமதுல்லா உள்ளிட்ட கொழும்பு ஸாஹிரா கல்லூரி அதிபர், கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரி அதிபர் மற்றும் வைத்தியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

காலை நேரம் கிராத் ஓதலுடன் ஆரம்பமான நிகழ்வில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

பின்னர் பாடசாலையில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் நீச்சல் பயிற்சி தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது. இதன் பின்னராக பாடசாலை ஒன்று கூடல் மண்டபத்தில் இடம் பெற்ற நிகழ்வுகளில் பல்வேறு தலைமைத்துவ விழிப்புணர்வு உரைகளும் நிகழ்வின் நோக்கம் பற்றிய கருத்துகளும் அதிதிகளால் முன்வைக் கப்பட்டன.

இதேநேரம் மாணவர்கள் குழுக்களாக இணைந்து குழுச்செயற்பாட்டிலும் ஈடுபட்டனர். அத்தோடு மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட புத்தாக்க உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் இடம்பெற்றது.

மாணவத் தலைவர்களின் மனப்பாங்கு மற்றும் உள விருத்தி செயற்பாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இச்செயலமர்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதுடன் எதிர்கால தலைவர்களை உருவாக்கும் வேலைத்திட்டமாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற விருது விழா





(சாய்ந்தமருது, பொலிவேரியன், மருதமுனை செய்தியாளர்கள்)

கல்முனை மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான விருது விழா புதன்கிழமை (14) மாலை கல்முனை இருதயநாதர் மண்டபத்தில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாநகர சபையின் 14 துறைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அதிசிறந்த ஊழியர்கள் 14 பேர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ மேற்பார்வையாளரான எம்.எம். றிஸ்வான், கல்முனை மாநகர சபையின் கடந்த ஆண்டுக்கான அதிசிறந்த ஊழியராக தெரிவு செய்யப்பட்டு விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையில் நிர்வாக உத்தியோகத்தர்களாக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள எம்.ஏ.ரஹீம், ஆனந்தகௌரி கந்தசாமி உள்ளிட்ட 06 உத்தியோகத்தர்களினதும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 08 உத்தியோகத்தர்களினதும் சேவைகளைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

மாநகர சபையின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற திண்மக் கழிவகற்றல் சேவையில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி வருகின்ற 05 மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட 98 ஊழியர்கள் இதன்போது பரிசுப் பொதிகள் வழங்கி கௌரவிக்கப்பட் டனர்.

அத்துடன் கல்முனை மாநகர சபையை பொறுப்பேற்று குறுகிய காலத்தினுள் நிர்வாக சீர்திருத்தங் களை மேற்கொண்டு, மாநகர சபையை வினைத்திறன் மிக்க நிறுவனமாக மாற்றியமைத்தமைக்காக மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி ஆளுமைக்கான அடையாளம் என்று மகுடம் சூட்டப்பட்டு, ஊழியர் சமூகத்தின் சார்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவ்விழாவில் மாநகர சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களினால் அரங்கேற்றப்பட்ட பாடல்கள், நடனங்கள், கவிதைகள் உள்ளிட்ட கலை, கலாசார நிகழ்ச்சிகள் விழாவை களைகட்டச் செய்திருந்தன.

தேசிய கீதத்துடன் ஆரம்பமான இவ்விருது விழாவில் மாநகர சபையின் பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம் வரவேற்புரையையும் பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, கால்நடை வைத்திய அதிகாரி என்.ஏ.வட்டப்பொல ஆகியோர் வாழ்த்துரைகளையும் விழாக் குழுச் செயலாளரான வருமான பரிசோதகர் சமீம் அப்துல் ஜப்பார் நன்றியுரையையும் நிகழ்த்தினர்.

விழா நிகழ்வுகளை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மட் ஜாபிர் தொகுத்து வழங்கினார்.

இவ்விழாவில் மாநகர சபையின் கணக்காளர் கே.எம்.றியாஸ், ஆயுர்வேத வைத்திய அதிகாரி நந்தினி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன், நிதி உதவியாளர் சசிகலா, உள்ளூராட்சி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.நௌசாட் உட்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வருமான பரிசோதகர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அனைத்துப் பிரிவுகளினதும் ஊழியர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.



மத்தியஸ்த நுட்ப முறை மற்றும் உபாயங்கள் தொடர்பான ஐந்து நாள் பயிற்சிநெறி காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போது அம்பாறை மாவட்ட செயலக மத்தியஸ்த பயிலுனர் எம்.ஐ.எம் ஆஸாத் மற்றும் வவுனியா மாவட்ட செயலக மத்தியஸ்த பயிலுனர் எஸ். விமலராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினர். இப்பயிற்சியின் இறுதிநாள் நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜனினால் பயிற்சி வழங்கிய பயிற்றுவிப்பாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (மாளிகைக்காடு செய்தியாளர்)



சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தின் தரம் 2 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அலங்கரிக்கப்பட்ட வகுப்புகளை கையளிக்கும் நிகழ்வு அதிபர் யூ.எல்.நஸார் தலைமையில் புதன்கிழமை(14) இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலிக் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர் அஸ்மியா மலிக் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டு வர்ணம்பூசி அலங்கரிக்கப்பட்ட வகுப்புகளை திறந்து வைத்தனர்.

(பொலிவேரியன் செய்தியாளர்)

# மெதடிஸ்த கல்லூரி மாணவர்கள் ஐவருக்கு சாரணர் விருது



(வெல்லாவெளி செய்தியாளர்)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் ஐவருக்கு சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது கிடைத்துள்ளதுடன் அவர்களுக்கு சின்னம் சூட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் இராசதுரை பாஸ்கர் தலைமையில் புதன்கிழமை(14) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாரணர் தலைமைச் செயலகத்தின் கிழக்கு மாகாண உதவி ஆணையாளர் பீ.சசிக்குமார், மாவட்ட சாரண ஆணையாளர் வீ.பிரதீபன், பாடசாலை அபிவிருத்தி சங்கச்செயலாளரும் மட்டக்களப்பு நகர மக்கள் வங்கி முகாமையாளருமான நாகலிங்கம் தினேஸ்குமார், குழுச்சாரணத் தலைவர் எம்.சந்திரசுசர்மன், குருளைச்சாரண தலைவர் ந.பிரதீபன் உட்பட பாடசாலையின் சாரண ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

இவர்களுக்கான ஜனாதிபதி சாரணர் விருது சான்றிதழை வடமத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 18 வருடங்களின் பின்னர் பாரதிபுரம் காணி அளவீடு



(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் மாஞ்சோலைச்சேனை எனும் ஊரில் வாழ்ந்த மக்கள், 2004ஆம் ஆண்டில் அரசாங்க அதிகாரிகளால் குடிபெயர்க்கப்பட்டு பாரதிபுரம் என்னும் இடத்தில் குடியமர்த்தப்பட்டனர்.

இம்மக்கள் குடியிருந்த இடத்தில் சந்தை, இளைஞர் தொழிற் பயிற்சி நிலையம், பொலிஸ் நிலையம் முதலியன அமைக்கப்பட்டுள்ளன. அவர்களை குடிபெயர்த்தபொழுது தாய் சேய் நிலையம், பாலர் பாடசாலை, பூங்கா, நூலகம், கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம், பலநோக்கு கட்டடம், விளையாட்டு அரங்கு, கோவில் முதலிய பொதுத் தேவைகளுக்காக 04 ஏக்கர் நிலம் தரப்படும் என்றும் அரசாங்க அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டது.

எனினும், இதுவரை இந்த நிலம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. பாரதிபுரம் மக்களின் பொதுத் தேவைக்கென அடையாளப்படுத்தப்பட்ட இடத்தில் 14 முஸ்லிம் குடும்பங்கள் அத்துமீறி வீடமைத்துள்ளனர்.

பாரதிபுரம் மக்களது 18 ஆண்டு அயராத முயற்சியின் பின் வியாழக்கிழமை(15) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் நில அளவையாளர்கள் இக்காணியை அளக்க வந்தனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவரும் நலன்புரிச் சங்கத் தலைவருமாகிய சண்முகம் குகதாசன் பாதிக்கப்பட்ட பாரதிபுர மக்கள் சார்பில் மேற்படி நில அளவையில் கலந்துகொண்டார்.

இவரோடு கிண்ணியா முன்னாள் நகரசபை உறுப்பினர் சி.பஞ்சலிங்கம், தமிழரசு இளைஞர் அணியைச் சேர்ந்த நிராஜ், இளவரசன் ஆகியோரும் இந்த நில மீட்புக்கான முன்னணி செயற்பாட்டாளர் சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



நிந்தவூர் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவில் சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற நிந்தவூர் - 14 பிரிவுக்கான சமுர்த்திப் பயனாளிக்கு ரூபா இரண்டு இலட்சத்துக்கான காசோலை பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் புதன்கிழமை(14) வழங்கப்பட்டது. இதன்போது சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.அன்வர், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.பி.எம்.ஹூசைன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர். (மருதமுனை செய்தியாளர்)

# தனியார் கல்வி நிறுவனங்கள் - குழு வகுப்புகளை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல்

(வவுனியா நிருபர்)

வவுனியாவிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புகள் என்பவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலொன்று வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (14) மதியம் 3 மணியளவில் இடம்பெற்றது.





மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான குலசிங்கம் திலீபன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் உதவிப் பிரதேச செயலாளர், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வைத்தியர், தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சில தீர்மானங்களை மேற்கொண்டிருந்தனர்.

வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை வழங்குவதுடன், ஏனைய தினங்களில் மாலை 6 மணிவரை மட்டுப்படுத்துமாறு தீர்மானம் முன்வைக்கப்பட்டது. இதற்கு தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் மறுப்பு தெரிவித்ததுடன் பல்வேறு காரணங்களையும் சுட்டிக்காட்டியிருந்தனர்.



பல வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்னர் வவுனியா மாவட்டத்திலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புகள் திங்கட்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மாலை 6.30 மணியுடன் நிறுத்துவதுடன், க.பொ.த. உயர் தர மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மாலை 7.00 மணியுடன் நிறுத்துமாறும், ஞாயிற்றுக்கிழமைகளில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையிலான மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முற்றாக நிறுத்துவதற்கும் தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்தமையும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்தவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தனியார் கல்வி நிறுவனங்களை மாநகர சபை மற்றும் பிரதேச சபைகளில் பதிவு செய்வதற்குரிய ஆவணங்களை மேற்கொள்வதுடன், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கல்வி நிறுவனங்கள் மற்றும் குழு வகுப்புகளில் காணப்படும் சுகாதாரப் பிரச்சினை தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# வட்டு. இந்துக் கல்லூரி சாரணர் துருப்புகளுக்கான கூடாரங்கள் வழங்கல்

(வட்டுக்கோட்டை நிருபர்)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் சாரணர் துருப்புகளுக்கான கூடாரங்கள் நேற்று வழங்கப்பட்டன.

பாடசாலையின் பழைய மாணவனான அருணாசலம் ஆதித்தன் முன்வந்து இந்த நன்கொடையை வழங்கியிருந்தார்.

அந்தவகையில், பழைய மாணவர் சங்கத்தினூடாக குறித்த கூடாரங்கள் நேற்று உத்தியோகபூர்வமாக பிரதி அதிபர், சாரணர் பொறுப்பாசிரியர் மற்றும் சாரணர்களிடம் கையளிக்கப்பட்டன.





# 3000 மில்லி லீற்றர் கசிப்புடன் அச்சுவேலியில் ஒருவர் கைது!

(வட்டுக்கோட்டை நிருபர்)

அச்சுவேலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாசுவன் சந்தியில் 45 வயது மதிக்கத்தக்க ஆணொருவர் நேற்று கசிப்புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பகுதியிலிருந்து ஊரெழு பகுதிக்கு 3000 மில்லிலீற்றர் கசிப்பை எடுத்துச்சென்றவேளையிலேயே அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்ட நிலையில் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மந்திகையில் திடீரென தீப்பற்றிய மின்மாற்றி



(வட்டுக்கோட்டை நிருபர்)

யாழ்ப்பாண, வடமராட்சி மந்திகைபகுதியில் மின்மாற்றியில் பொருத்தப்பட்டிருந்த மின்மானி அலகுப் பெட்டி தீப்பற்றியதால் அப்பகுதியில் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தீப்பற்றியதை அவதானித்த அருகிலுள்ள வர்த்தகர்கள் உடனடியாக மின்சார சபை அலுவலகத்திற்கு அறிவித்ததையடுத்து அங்கு விரைந்து சென்ற இலங்கை மின்சார சபை அதிகாரிகள் மின்சாரத்தை உடனடியாகவே துண்டித்து தீயை அணைத்த பின் மின்மானி அலகுப் பெட்டியை திருத்தம் செய்து மின்தடங்கலை சீர்செய்தனர்.

# மன்னாரில் திடீரென தீப்பற்றி எரிந்த வாகனம்: தெய்வாதீனமாக உயிர் தப்பிய சாரதி!



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இசைமாலைத்தாழ்வு பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை வாகனமொன்று முழுமையாகப் பற்றியெரிந்த நிலையில் சாரதி மற்றும் உதவியாளர் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி இசைமாலைத்தாழ்வுப் பகுதியில் வியாபாரப் பொருட்களுடன் மன்னார் நோக்கிப் பயணித்த சிறிய ரக பட்டா ரக வாகனத்தின் எஞ்சின் பகுதி திடீரெனத் தீப்பற்றிய நிலையில் வாகனச் சாரதி மற்றும் உதவியாளர் துரித கதியில் வாகனத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

அவர்கள் வெளியேறிய சற்றுநேரத்தில் வாகனம் முழுவதும் தீப்பரவல் ஏற்பட்டு முழுமையாக வாகனம் எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மல்லாகத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்லாகம் சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் (14) ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏழாலை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஆணொருவர் ஒரு கிராம் 380 மில்லிகிராம் ஹெரோயினை எடுத்துச் சென்றவேளையிலேயே காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டார். அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஏழு ஆண்டுகளாக கணக்குகள் பரிசீலனை செய்யப்படவில்லை

## மஸ்கெலிய கூட்டுறவுச் சங்கத்தின் அசமந்தப்போக்கு

(மஸ்கெலிய செய்தியாளர்)

மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் கீழ் இயங்கும் மஸ்கெலிய பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகள் தொடர்பில் கடந்த 2016 ஆம் ஆண்டு முதல் கூட்டுறவுத் திணைக்களத்தின் மூலம் பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை இது அவர்களின் அசமந்தப் போக்கையே காட்டுகிறது என நுவரெலியா கூட்டுறவுச் சங்கத்தின் ஆணையாளர் தெரிவித்தார்.

தகவலறியும் சட்டமூலத்துக்கிணங்க மஸ்கெலிய கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நடத்தப்படும் கிராமிய வங்கிக் கிளையின் கணக்கு சம்பந்தப்பட்ட விபரம் கேட்ட போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான ஆணையாளர் திருமதி பிரேமசிங்க எழுத்து மூலம் இந்த விடயத்தை அறியத்தந்துள்ளார்.

மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகளும் வருடாந்தம் கணக்காய்வாளர்கள் மூலம் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். இருந்தபோதும், மஸ்கெலிய பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் நடத்தப்படும் கிராமிய வங்கிக் கிளையின் கணக்குகள் கடந்த 7 ஆண்டுகளாக கணக்காய்வாளர்கள் மூலம் ஆய்வு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.







இனங்களுக்கிடையிலான சகவாழ்வு, நல்லிணக்கம் தொடர்பாக எழுதப்பட்ட நூல் தொகுதியை கண்டி பிரதேச வாசிகசாலைகளுக்கு தேசிய சமாதானப் பேரவை இலவசமாக வழங்கியது. இந்நிகழ்வை கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. (கண்டி செய்தியாளர்)

# பொலிஸ் அதிகாரிகளை தாக்கிய இருவர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

காவத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அதிகாரிகளைத் தாக்கிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காவத்தை நகரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இசைக்கச்சேரியில் கலந்துகொண்ட இரு குழுவினர் வைத்தியசாலையின் வளவில் மோதலில் ஈடுபட்டதால் இவர்களை சமரசம் செய்ய முற்பட்ட இரு பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய நிலையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இக்குழுவினர் காவத்தை நகரில் இடம்பெற்ற இசைக் கச்சேரியில் மோதலில் ஈடுபட்டதால் காயமடைந்தவர்களை காவத்தை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கச் சென்றபோது இவ்வைத்தியசாலை வளவிலும் அவர்கள் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவங்களில் காயமடைந்த இருவர் காவத்தை அரச வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். அத்துடன் காயமடைந்த இரு பொலிஸாரும் அதே வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# டெங்கு நோயாளர்கள் உக்குவளையில் அதிகரிப்பு



(உக்குவளை செய்தியாளர்)

சமீபகால மழையுடன்கூடிய வானிலை நிலைமை காரணமாக இலங்கையின் பல இடங்களில் டெங்கு பரவிவரும் நிலையில், கிழமைக்கு ஐவர் வீதம் உக்குவளை பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

டெங்கு பரவுவது குறித்தும் அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவது குறித்தும் நாம் மத வழிபாட்டுத்தலங்கள் மூலமாகவும் ஊடகங்கள் மூலமாகவும் மக்களுக்கு சுகாதார வழிகாட்டல்களை அறிவுறுத்தி வருகிறோம். எனினும், இதுவிடயத்தில் மக்களது அவதானம் போதுமானதாகத் தெரியவில்லை. நோய் வந்தபின் சிகிச்சை பெறுவதைவிட நோய் வருமுன் பாதுகாப்பாக நடந்துகொள்வதே புத்திசாலித்தனம் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் மக்கள் ஒத்துழைக்காவிட்டால் வரலாற்றில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகும் ஆண்டாக இந்த ஆண்டு மாறும் அபாயமுள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# வேலைவாய்ப்பு மோசடியில் ஈடுபட்ட இளம் தம்பதியினர் கைது

(கண்டி செய்தியாளர்)

உயர்ந்த சம்பளத்துடனான வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற்றுத்தருவதாகக் கூறி பலரிடம் ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை மோசடி செய்த இளம் தம்பதியை ரம்புக்கனை பொலிஸார் நேற்றுமுன்தினம் (14) கைதுசெய்துள்ளனர்.

ரம்புக்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த மோசடி தொடர்பில் பொதுமக்கள் இணைந்து சந்தேக நபர்களான இளம் தம்பதியினரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அதனையடுத்து சந்தேக நபரும் அவர் மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் இருவரும் ரம்புக்கனை, வெலிகொடபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். ஜப்பான், டுபாய் போன்ற நாடுகளில் அதிக சம்பளத்தில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி பண மோசடி செய்துள்ளதாகக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் ஒரு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையை மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது. ரம்புக்கன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழப்பு

## கண்டியில் சம்பவம்

கண்டி – மெனிக்ஹின்ன பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நில வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வயல் நிலமொன்றிலேயே இந்த வெடிப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், வெடிக்கவைக்கும் உபகரணமொன்றை நபரொருவர் பயன்படுத்தி தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் மெனிக்ஹின்ன – கல்கடுவ பகுதியைச் சேர்ந்த 36 வயதான முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilanbusiness@gmail.com

# தனது கன்னிப் பயணத்தை மேற்கொண்ட Cordelia Cruisesஐ ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் வரவேற்ற Advantis

- Advantis மற்றும் Cordelia Cruises ஆகியன நாடு முழுவதும் கப்பல் பயண நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக கைகோர்த்துள்ளன
- MS Empress 1,600 பயணிகளுடன் இலங்கை வந்து சேர்ந்தது
- முதல் 4 மாதங்களில் மட்டும் 80,000 சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது
- Cordelia கப்பல் பயணத்திற்காக இலங்கையில் பொது விற்பனை முகவராகவும் துறைமுக முகவராகவும் Advantis, நியமிக்கப்பட்டுள்ளது







இலங்கையின் சுற்றுலாத் துறைக்கு ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கும் வகையில் இலங்கைக்கு வரும் சொகுசு சுற்றுலாப் பயணிகளுக்கான கப்பலை அறிமுகப்படுத்தும் முகமாக, Hayleys குழுமத்தின் போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் பிரிவான Advantis, Cordelia Cruises இன் MS Empressஐ பதன்கிழமை 07ஆம் திகதி வரவேற்றது.



இந்தியாவின் உயர்மட்ட கப்பல் வரிசைகளில் ஒன்றான Cordelia Cruises உடனான புதிய கூட்டாண்மையைப் பயன்படுத்தி, Advantis குழுவினர் சென்னையில் இருந்து வந்த 1,600 சுற்றுலாப் பயணிகளை அன்புடன் வரவேற்றனர்.

இவ்வாறு இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, பாரம்பரிய நடனக் கலைஞர்கள் மற்றும் பாரம்பரிய மேள கலைஞர்களின் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

“Cordelia Cruisesஐ வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம் இந்த புதிய சொகுசுக் கப்பல் முற்றிலும் சுற்றுலாப் பயணிகளுக்கானது. சுற்றுலாத் துறைக்கான கணிசமான வணிக வாய்ப்புகளுக்கு புத்துயிர் அளிப்பதற்கும் அதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் எமது முயற்சிகளில் இது குறிப்பிடத்தக்க மைல்கல் என்றே குறிப்பிட வேண்டும், அதே போல் எங்கள் நாட்டிலுள்ள வளத்தைப் பயன்படுத்தி, கப்பல் பயணங்களுக்கான உலகளாவிய முக்கிய இடமாகவும் இலங்கை அமைந்துள்ளது.” என ஹேலிஸ் குழுமத்தின் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டிதகே தெரிவித்தார்.

Advantis மற்றும் Cordelia Cruises ஆகியன அவர்களின் நிபுணத்துவம் மற்றும் வளங்களை ஒருங்கிணைத்து, அவர்களது பகிரப்பட்ட நோக்கம் இலங்கையின் முழுத் திறனையும் வெளிக் கொணர்வதும், விதிவிலக்கான அனுபவங்களைத் தேடும் சொகுசுப் பயணிகளுக்கான சிறந்த இடமாக நாட்டை நிலைநிறுத்துவதும் ஆகும்.

தெற்காசியா முழுவதிலும் உள்ள விவேகமான பயணிகளுக்கான முதன்மையான இடங்களாக இலங்கை மற்றும் இந்தியா இரண்டையும் நிலைநிறுத் துவதற் கான முதல் படியாக Advantis உடனான எங்களது கூட்டாண்மை அமைந்தது. இந்த தனித்துவமான மற்றும் மாறுபட்ட சுற்றுலா இடங்களை தடையின்றி ஒருங்கிணைப்பதன் மூலம், சுற்றுலாப் பயணிகளுக்கான புதிய எல்லைகளை பட்டியலிடுவதையும், இரு நாடுகளுக்கும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்,” என Cordelia Cruises தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான Jurgen Bailom தெரிவித்தார்.

MS Empress ஆனது 796 கேபின்களை ஐந்து தனித்தனி பிரிவுக ளில் கொண்டுள்ளது, ஒவ்வொன்றும் அதிநவீன வசதிகளுடன் கூடியவை, அவை 1,600 பயணிகளுக்கு இணை யற்ற சொகுசு மற்றும் ஏனைய வசதியை வழங் குகிறது.

பயணிகளுக்கு நாட்டைச் சுற்றி மறக்க முடியாத பயணத்திற்கு களம் அமைத்துக் கொண்டு, இக்கப்பல் 2023 ஜூன் 5 ஆம் திகதி சென்னை துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது.




Advantis நிறுவனத்தின் முகாமைத் துவப் பணிப்பாளர் ருவன் வைத்தியரத்ன இந்த கூட்டாண்மை குறித்து கருத்துத் தெரிவிக்கையில், “ஒரு தீவான, இலங்கை பல நூற்றாண்டுகளாக கடல் வர்த்தகம் மற்றும் பயணத்தை ஈர்த்துள்ளது. எவ்வாறாயினும், நவீன யுகத்தில், நமது தேசம் இன்னும் அதன் இயற்கையான நன்மைகளை நமது திறனுக்கு ஏற்றவாறு பயன்படுத்தவில்லை. Cordelia Cruises உடனான எங்கள் கூட்டணியின் மூலம், இலங்கையின் வளமான பாரம்பரியம், பிரமிக்க வைக்கும் இயற்கை அழகு மற்றும் உற்சாகமான கலாசார பன்முகத்தன்மையை ஆராய்வதற்கான குறிப்பிடத்தக்க வாய்ப்பை பயணிகளுக்கு வழங்குவதன் மூலம், நாடு முழுவதும் முதன்முறையாக கப்பல் பயணத்தை எளிதாக்க முடிந்தது. அடுத்த நான்கு மாதங்களில் மட்டும் குறைந்தது 80,000 உல்லாசப் பயணிகளை ஈர்ப்பதற்காக Cordelia குழுவுடன் நெருங்கி பணியாற்ற நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.” என தெரிவித்தார்.

குழுமத்தின் பயணம் மற்றும் விமானப் பிரிவு பொது விற்பனை முகவராக Advantis பணியாற்றும் என்பதோடு Advantis குழுமத்தின் துணை நிறுவனமான Clarion Shipping இலங்கையில் Cordelia கப்பல்களுக்கான துறைமுக முகவராக செயற்படும்.

பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேசியா, மாலைதீவு, மியன்மார், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவம் மற்றும் செயல்பாடுகளைக் கொண்ட Advantis இலங்கையின் மிகவும் பல்வகைப்பட்ட போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் சேவை வழங்குநராகும். Blue-chip பன்னாட்டு நிறுவனமான Hayleys PLCஇன் ஆதரவுடன், போக்கு வரத்து மற்றும் ஏற்றி இறக்கல் துறையில் Advantis முன்னணியில் உள்ளது. ஒருங்கிணைந்த ஏற்றி இறக்கல், திட்டங்கள் மற்றும் பொறியியல், கடல் மற்றும் ஆற்றல், சர்வதேச சரக்கு நிர்வகிப்பு மற்றும் பயணம், விமான போக்குவரத்து ஆகியவற்றையும் அது மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

---

நவீன மகப்பேறு மற்றும் குழந்தைப் பராமரிப்புப் பிரிவை அறிமுகப்படுத்தி

## தனியார் சுகாதார சேவைக்கான புதிய தரநிலையை அடையும் நவலோக்க





இலங்கையில் தனியார் சுகாதார சேவைகளை வழங்கும் முன்னணி நிறுவனமான நவலோக்க மருத்துவமனைக் குழுமம், தாய் மற்றும் குழந்தை பராமரிப்பு பிரிவில் ஒரே நேரத்தில் 15 தாய்மார்களை தங்க வைக்கும் வசதிகளைக் கொண்டுள்ளது மற்றும் நான்கு தனியார் மகப்பேறு வார்டுகளில் குழந்தையின் தந்தைகளும் பிரசவ நேரத்தில் பக்கத்தில் இருக்க முடியும்.

இந்த பிரிவில் சர்வதேச தரத்திற்கு அமைவாக பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை பிரிவு (NICU) மற்றும் குறைமாத குழந்தைகளின் பராமரிப்புக்கான அதிநவீன இன்குபேட்டர்கள் மற்றும் கண்காணிப்பு உபகரணங்களுடன் கூடிய குறைமாத குழந்தை பிரிவும் (PBU) இதில் அடங்கியுள்ளன.

குழந்தை கருவுற்றது முதல் பிரசவம் வரை குழந்தையின் ஆரோக்கியத்தை உன்னிப்பாகக் கண்காணிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பத் துடன் இந்த அலகு பொருத்தப்பட்டுள்ளது.

நவலோக மருத்துவமனையானது, பல மேற்கத்திய நாடுகளில் பரவலாக பிரபலமான epidural labour analgesiaவுடன் பாதுகாப்பான பிரசவ அனுபவத்தை வழங்குகிறது. இது ஒரு தகுதிவாய்ந்த ஆலோசகர் மயக்க மருந்து நிபுணரின் மேற்பார்வையின் கீழ் மற்றும் வலி நிவாரணி மருந்துகளை வழங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் இந்த பிரிவு, எதிர்காலத்தில் குழந்தைச் செல்வங்களை எதிர்பார்த்துள்ள பெற்றோர்களுக்கான ஆலோசனை நிகழ்ச்சிகள், தாய்ப்பால் ஆலோசனை திட்டங்கள், உடல் சிகிச்சை மற்றும் பிரசவத்திற்கு பின்னரான ஊட்டச்சத்து ஆலோசனைகளை வழங்குகிறது.

ஒரு வழக்கமான மகப்பேறு பேக்கேஜின் விலை, ஆலோசகர் கட்டணத்தைத் தவிர்த்து, தற்போது 75,000 ரூபாவாக உள்ளது. இது மகப்பேறு கட்டணத்துடன் 1 நாட்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற உதவுகிறது. 130,000 ரூபா பேக்கேஜில் சிசேரியன் பேக்கேஜ் உள்ளது மற்றும் ஆலோசகர் கட்டணம் தவிர்த்து பிரசவக் கட்டணங்களுடன் 2 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் நியோனாட்டாலஜிஸ்ட்கள் உட்பட முன்னணி ஆலோசகர்கள் குழுவுடன் வாரத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணிநேரமும் (24/7) சேவையை வழங்குவது, தாய் மற்றும் குழந்தை பராமரிப்பில் சிறப்பாகப் பயிற்சி பெற்ற திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த ஊழியர்களைக் கொண்டு இந்த பிரிவு பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

## புத்தாக்கமான ஏற்றுமதி உத்திகளுடன் அதன் உலகளாவிய இருப்பை உறுதி செய்யும் Alumex

BRONZE
**Asia Integrated Reporting Awards 2021**
Asia's Best Integrated Report (SME)

உயர்தர அலுமினியத்தின் முன்னணி உற்பத்தியாளரும், Hayleys குழுமத்தின் துணை நிறுவனமான Alumex PLC, அதன் மதிப்பு கூட்டப்பட்ட நன்மைகளை விரிவுபடுத்துவதற்கும், தொழில்துறையில் முன்னணி ஏற்றுமதியாளராக தனது நிலையை உறுதிப்படுத்துவதற்கும் உறுதிபூண்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில், Alumex PLC உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தையை தொடர்ச்சியான புத்தாக்கங்களுடன் தனதாக்கிக் கொள்ளும்.











உற்பத்தியாளர் இப்போது உள்ளூர் சந்தைக்கு புத்தாக்கமான புதிய DIY (Do it yourself) தயாரிப்புகளை அறிமுகப்படுத்துகிறார். புதிய வரம்பு, பரந்த அளவிலான தயாரிப்புகளை உள்ளடக்கியது, சந்தை தேவைகளை பூர்த்தி செய்யும் மற்றும் வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கு தனித்துவமான புத்தாக்கமான தீர்வுகளை வழங்கும்.

சபுகஸ்கந்தையில் உள்ள அதிநவீன அலுமினியம் உருக்கும் ஆலையில் முதலீடு செய்த பிறகு, Alumex அதன் குறைந்த கார்பன் அலுமினிய வரம்பான Ozon மற்றும் Re_Al ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் கட்டுமானத் துறையில் நிலையான புத்தாக்கங்களை மேலும் ஊக்குவிக்கிறது.

“கடந்த இரண்டு வருடங்கள் நம் அனைவருக்கும் சவாலானவை. எவ்வாறாயினும், சவால்களை சமாளிக்கக் கூடிய திறன் எங்களின் ஏற்றுமதியை விரிவுபடுத்தவும், அதிக ஏற்றுமதி வருவாயை உருவாக்கவும் மற்றும் எங்கள் தொழில் பங்குதாரர்களைக் கவனித்துக்கொள்ளவும் உதவுகிறது, இது எங்களது முக்கிய தூரநோக்கு பார்வையாகும்.”

“எங்கள் தூரநோக்கு பார்வையை உணர்ந்து, உற்பத்தியாளர்கள், கைவினைஞர்கள், மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு எங்கள் தூரநோக்கு பார்வைக்கு ஆதரவளிக்கும் மற்றும் ஆக்கப்பூர்வமான திறன்களை வளர்த்துக் கொள்ளக்கூடிய தொழில் வல்லுநர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக, ஏற்றுமதி வருவாயை அதிகரிக்க புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தும் போது, எங்கள் பயிற்சி அமர்வுகளை நாங்கள் தொடர்ந்து நடத்தி வருகிறோம்.” என Alumex முகாமைத்துவ பணிப்பாளர் பிரமுக் தெதிவெல தெரிவித்தார்.

Alumex இலங்கையில் ஏற்றுமதி விருதுகள் உட்பட பல்வேறு மதிப்புமிக்க தளங்கள் மற்றும் வணிகங்களில் இருந்து பல விருதுகளை வென்றுள்ளது. அவற்றில், 2022 NCE விருது வழங்கும் நிகழ்வில், ஏற்றுமதி அலுமினியம் உருக்கு முறைகளை அறிமுகப்படுத்தியதற்காக, இயந்திரங்கள் மற்றும் பொறியியல் உற்பத்தித் துறைக்கான தங்க விருதை வென்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், Alumex CNCI Achiever Award 2022 விருது வழங்கும் நிகழ்வில் முதல் 10 வெற்றியாளர்கள் மற்றும் தேசிய வணிக சிறப்பு விருதுகளில் உற்பத்தித் துறையில் முன்னணியில் இருப்பதன் மூலம் தொழில்துறையில் அதன் நற்பெயரை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

அதன் பங்குதாரர்களுக்கு வெளிப்படையான அறிக்கையிடலுக்கான நற்பெயரை மேலும் உறுதிப்படுத்தும் வகையில், Aluex ஆனது 2022 CA Sri Lankazs TAGS விருது வழங்கும் நிகழ்வில் சர்வதேச அங்கீகாரத்தை வென்றது மற்றும் 2021 Asia Integrated Reporting Awards பிரிவில் சிறந்த வருடாந்திர அறிக்கைக்கான தங்க விருதை வென்றது. ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகளில் 2022 CMA சிறந்து விளங்கும் முதல் 10 ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகளில் நிறுவனம் இடம் பெற்றது.

“2022 இல் வென்ற விருதுகள் எங்கள் குழுவின் கடின உழைப்பையும் அர்ப்பணிப்பையும் பிரதிபலிக்கின்றன, மேலும் இது புதிய தரங்களைத் தொடர்ந்து அமைக்க பலப்படுத்துகிறது.” என தெதிவெல தெரிவித்தார்.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk | thamilanbusiness@gmail.com

## Amana Takaful Insurance இன் வருடாந்த விருது வழங்கும் விழாவில் சிறந்த ஊழியர்களுக்கான கௌரவிப்பு




இலங்கையின் முதன்மையான காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான Amana Takaful Insurance, கடந்த 2023 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள Monarch Imperial இல் தனது வருடாந்த விருது வழங்கும் விழாவை மிகவும் கோலாகலமாக நடத்தியது. “சவால்களை வென்று எழுதல்” என்ற தொனிப்பொருளின் கீழ் நடத்தப்பட்ட இந்நிகழ்வானது, தடைகளைத் தாண்டி வெற்றியை அடைவதில் இந்த நிறுவனம் காட்டிய திடமான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியது. நாட்டில் நிலவிய சவாலான பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில், Amana Takaful Insurance நிறுவனத்தின் தொடர் வலுவான நிதிச் செயற்பாட்டின் பின்னணியில் இந்நிகழ்வு காலத்துக்கேற்ற முக்கியமான நிகழ்வாக அமைந்தது.

Amana Takaful Insurance நிறுவனத்தின் அர்ப்பணிப்பு மிக்க நிபுணர் குழுவின் கூட்டு சாதனைகள் மற்றும் அயராத முயற்சிகளின் கொண்டாட்டமாக மாற்றியமைத்ததோடு மட்டுமல்லாது, நாட்டின் அனைத்து மூலைகளிலிருந்தும் ஊழியர்களை ஒன்றிணைத்தது. நாடு முழுவதும் பரந்திருக்கும் இந்நிறுவனத்தின் கிளைகள் பெற்றுக்கொண்ட விருதுகள், இந்நிறுவனம் நாடு முழுவதிலும் பெற்றுள்ள அங்கீகாரம் மற்றும் வெற்றிக்குச் சான்றாக அமைந்தன.

இந்த விருது வழங்கும் நிகழ்வானது இந் நிறுவனம் சிறப்பை நோக்கித் தொடர்ந்து மேற்கொள்ளும் பிரயத்தனம் மற்றும் அதன் தனித்துவமிக்க நபர்களின் ஆதரவுடன் சவால்களை வெல்லும் திறன் ஆகியவற்றை மேலும் வலுப்படுத்த ஒரு வாய்ப்பாக அமைந்தது.

மறக்கமுடியாத தருணங்கள் மற்றும் சிறந்த சாதனைகள் நிறைந்த ஒரு மாலையாக நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுக்காப்பீடு நிறுவனத்தின் சார்பாக, “Champions of Champions” விருது M.M.K முனீஃப்க்கு வழங்கப்பட்டமை சிறப்பம்சம் ஆகும். அவரது சிறப்பான செயல்திறன் மற்றும் வணிகத்திற்காக அவர் வழங்கிய விலைமதிப்பற்ற பங்களிப்புகளை அங்கீகரிக்கும் முகமாக இந்தப் பாராட்டு அவருக்கு வழங்கப்பட்டது. இவ்வங்கீகாரத்துடன் முனீஃப் ரொக்கப் பரிசையும் வெளிநாட்டு சுற்றுப்பயணத்துக்கான வாய்ப்பையும் வென்றமை குறிப்பிடத்தக்கது.

ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் சார்பாக, Champions of Champions விருதை தனது சாதனைகளுக்காக A.H.A. இஃப்ஹாம் வென்றார். இஃப்ஹாமின் சிறப்பான அர்ப்பணிப்பு மற்றும் அவரடைந்த சாதனைகள் காரணமாக அவர் First Court of the Table (COT) விருதையும் பெற்று ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டினார். Amana Takaful lfe Insurance நிறுவனத்தின் வரலாற்றில் ஒரு ஆலோசகர் இந்த நன்மதிப்பிற்குரிய அங்கீகாரத்தைப் பெற்றமை இதுவே முதன்முறையாகும். அவரது சிறப்புமிக்க சாதனையை கௌரவிக்கும் வகையில், இஃப்ஹாமுக்கு ஒரு மில்லியன் ரூபா ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. ஆயுள் காப்பீட்டு ஆலோசகர் வெல்லக்கூடிய இரண்டாவது மிக உயரிய பிரிவான Court of the Table ஆனது, ஒரு விற்பனை ஆலோசகர் தனக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை விட மூன்று மடங்கு அதிகமாக அடையும்போது பெறப்படும்.

நிகழ்வின்போது பேசிய Amana Takaful Insurance நிறுவனத்தின் தலைவர் சுல்பிகார் கவுஸ், நிறுவனத்தின் ஊழியர்கள் வென்றுள்ள சாதனைகள் குறித்து தனது பெருமிதத்தை வெளிப்படுத்தினார். “வருடாந்த விருது வழங்கும் நிகழ்வானது, எமது நிறுவனம் சார்பாக தமது சிறப்பான செயல்திறனைத் தொடர்ந்து வெளிப்படுத்தி, எமது வெற்றிக்கு பலவகைகளிலும் பங்களிப்பை வழங்கிய நபர்களை அங்கீகரித்து கொண்டாடுவதற்கான ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும். அவர்களது அயராத அர்ப்பணிப்புதான் நம்மை முன்னோக்கித் தள்ளுகிறது, சவால்களை வென்று மகத்துவத்தை அடைய வழிவகுக்கின்றது.”

Amana Takaful Insurance ஆனது வாடிக்கையாளர்களை மையப்படுத்திய, சிறந்த நெறிமுறை நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்ட காப்புறுதியின் (Takaful) தனித்துவமான கருத்தாக்கத்திற்கு முன்னோடியாகத் திகழ்கின்றது. இந்த நிறுவனம் 1998 இல் ஒரு பொது நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டதோடு, 2006 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளது. Amana Takaful Insurance ஆனது இலங்கை முழுவதும் 40 இற்கும் அதிகமான கிளைகளைக் கொண்டுள்ளதன் மூலம் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய அதன் புவியியல் அடிச்சுவட்டை விரிவுபடுத்தியுள்ளது. ISO 9001 அங்கீகாரம் பெற்ற அமைப்பான Amana Takaful Insurance நிறுவனமானது 2005 ஆம் ஆண்டு முதல் மாலைதீவில் பல வெளிநாட்டு இருப்புகளைப் பராமரித்து வருகிறது. இந்த இருப்புகள் 2011 ஆம் ஆண்டு free-standing PLC ஆக மாலைதீவு பங்குச் சந்தையில் (MSE) பட்டியலிடப்பட்டது. Amana Takaful Insurance ஆனது முழுமையான பொது மற்றும் ஆயுள் காப்பீட்டுத் தீர்வுகள் மற்றும் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளின் ஒட்டுமொத்த சுகாதாரத் தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட உடல்நலக் காப்பீட்டுக் கொள்கைகள் ஆகியவற்றை வழங்குகின்றது.

இடமிருந்து வலமாக ஷர்ஹான் முஹ்சீன் – பிரதித் தலைவர் Amana Life, ஒஸ்மான் காசிம் – தலைவர் Amana Life, கெஹான் ராஜபக்ஷ– பிரதம நிறைவேற்று அதிகாரி Amana Life, ஆசிப் ரஹீம் – தேசிய விநியோகத் தலைவர், நிமல் பிரியந்த – AGM–விற்பனை, ஏ.எச்.ஏ இஃபாம் – Champions of Champions (Life), எம்.எம்.கே. முனீஃப் – சாம்பியன்ஸ் சாம்பியன் (பொது), ஷெஹான் ஃபைசல் – தலைமை நிர்வாக அதிகாரி அமானா ஜெனரல், ஜுல்பிகார் கவுஸ் – சைமன் Amana General, ஹசன் காசிம் – நிர்வாகப் பணிப்பாளர், சுரேஷ் பஸ்நாயக்க – தலைமை விற்பனை அதிகாரி, ஜாகிர் கனகா – AGM–கிளை விற்பனை விநியோகம், நௌஷாத் காசிம் – துணை பொது முகாமையாளர் – விற்பனை (metropolitan)

## தெஹிவளை கடற்கரையை சுத்தம் செய்த SCS EXPRESS கூரியர் நிறுவனம்






சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற கூரியர் நிறுவனமான SCS EXPRESS கடலோரச் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் தெஹிவளை கடற்கரையை சுத்தம் செய்யும் பணியில் அண்மையில் ஈடுபட்டது. நம்பகமான கூரியர் சேவையை வழங்கிவரும் இந்நிறுவனத்தின் அர்ப்பணிப்புள்ள பணியாளர்களால் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

கடல் மாசுபாட்டைத் தடுப்பதும் மாசுபாட்டின் தீங்கான விளைவுகளிலிருந்து கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதும் சுற்றுச் சூழலின் ஆரோக்கியத் தன்மையைப் பேணுவதும் இதன் நோக்கமாக அமைந்தது.

தெஹிவளை– கல்கிசையில் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்தை 50 பேர் கொண்ட பணிக்குழாம் கடந்த மூன்றாம் திகதி சுத்தம் செய்தது. இது குறித்து SCS EXPRESS நிறுவனத்தின் பணிப்பாளர் ஆர்.எம்.ஆர். நிஷாந்த தெரிவிக்கையில், கரையோரத்தைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு நமக்கு உண்டு. அது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான சுற்றுச்சூழலை உருவாக்கலாம் என நாம் நம்புகிறோம் எனத் தெரிவித்தார்.

SCS EXPRESS நிறுவனமானது கடந்த 17 வருடகாலமாக இலங்கையில் கூரியர் சேவையை மிகச் சிறப்பான முறையில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தொழிற்றுறைகள் மற்றும் சிறு - நடுத்தர தொழில் முயற்சிகளை ஊக்குவிக்க தேசிய கைத்தொழில் கண்காட்சி 2023 உடன் இணையும் செலான் வங்கி

அன்புடன் அரவணைக்கும் செலான் வங்கி அனைவரும் அதிகம் எதிர்பார்த்திருக்கும் தேசிய கைத்தொழில் கண்காட்சி 2023 உடனான தனது கூட்டான்மையை அறிவித்துள்ளது. இக்கண்காட்சி கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் கைத்தொழில் அமைச்சின் நோக்கங்களின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதோடு, ஜூன் 22 முதல் 25 வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இடம்பெறவுள்ளது.

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களின் (SME) வளர்ச்சி மற்றும் விருத்திக்கான ஊக்குவிப்பாளராக செயற்பட்டுவரும் செலான் வங்கியின் தேசிய கைத்தொழில் கண்காட்சியுடனான இக் கூட்டாண்மை, சாதகமான பொருளாதார மாற்றங்கள் நடைபெறும் இக்காலப்பகுதியில் உள்நாட்டு வணிகங்களை ஊக்குவிக்கும் வங்கியின் நோக்கத்துடன் நன்கு ஒத்திசைவதாக அமைந்துள்ளது. இக்கண்காட்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதனூடாக பொருளாதார சுபீட்சத்தை உருவாக்குவதற்கும் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி தேசத்தை முன்கொண்டு செல்வதற்கும் வங்கி எதிர்பார்க்கிறது.




தேசிய கைத்தொழில் கண்காட்சியானது தொழிற்றுறை சார்ந்தோர், நிபுணர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் கலந்துகொண்டு இலங்கையின் தொழிற்றுறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய கருத்துகளையும் தீர்வுகளையும் பரிமாற்றிக்கொள்ளும் ஒரு தளமாக செயற்படுகின்றது. தொழில்நுட்ப நிபுணர்கள், தொழிற்றுறை சங்கங்கள், கூட்டமைப்புகள், கொள்கை உருவாக்குனர்கள் அத்தோடு தொழிற்றுறை மற்றும் வணிக விற்பனையாளர்களின் பங்கேற்போடு இடம்பெறும் இக்கண்காட்சி தேசத்தின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இன்றியமையாத ஒரு நிகழ்வு எனலாம்.

செலான் வங்கியானது தொழிற்றுறை சார்ந்தோர், ஏற்றுமதியாளர்கள் மற்றும் சிறிய–நடுத்தர தொழில் முயற்சியாளர்களின்(SME) தனித்துவமான தேவைகளை நிறைவேற்றும் கட்டமைக்கப்பட்ட பல்வேறு நிதிச்சேவைகளைப் பெற்றுத்தந்து நம்பிக்கை மிகுந்த ஒரு நிதிச்சேவை வழங்குனராக செயற்படும். இவற்றில் மீள் நிதிச்சேவை வசதிகளூடாக செயற்படுத்தப்படும் சிறப்பு வங்கித் தீர்வுகள், எளிமையாக்கப்பட்ட நாளாந்த வணிகத் தீர்வுகள், ஏற்றுமதியுடன் தொடர்புடைய வணிகங்களுக்கு ஆலோசனைச் சேவைகள் என மேலும் பல சேவைகள் உள்ளடங்கும். இலங்கையின் தொழிற்றுறைப் பிரிவின் வளர்ச்சி மற்றும் நீடிப்புக்கு பக்கபலமாக இருந்து அதனூடாக தேசத்தின் பொருளாதார சுபீட்சத்துக்கு பங்களிப்பு செய்வதை செலான் வங்கி நோக்கமாகக் கொண்டுள்ளது.

தேசிய கைத்தொழில் கண்காட்சி 2023 ஆனது இலங்கை தொழிற்றுறைகளின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்துள்ள அனைத்து பங்குதாரர்களும் கட்டாயமாகக் கலந்துகொள்ளும் ஒரு நிகழ்வாகும். கண்காட்சியில் அமைந்துள்ள தமது கூடத்திற்கு வருகை தந்து நிதிச்சேவைகளின் விரிவான தொகுதி பற்றியும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் கலந்துரையாடுவதற்காக பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் செலான் வங்கி அழைப்பு விடுக்கிறது.

### செலான் வங்கி பற்றி

அன்புடன் அரவணைக்கும் வங்கியான செலான் வங்கி தனது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு அதியுச்ச வங்கிச்சேவை அனுபவத்தை அதி நவீன தொழில்நுட்பம், புத்தாக்க உற்பத்திகள் மற்றும் குறித்த பிரிவில் அதிசிறந்த சேவை ஆகிய அம்சங்களினூடாக பெற்றுத்தரும் நோக்கில் இயங்கி வருகின்றது. வங்கியோடு இணைந்துள்ள சிறிய – நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், சில்லறை மற்றும் கூட்டு நிறுவன வாடிக்கையாளர்கள் தொடர்ந்தும் அதிகரித்து வருவதோடு நாடெங்கும் 540க்கும் மேற்பட்ட அணுகல் வழிமுறைகளையும் செலான் வங்கி கொண்டுள்ளது.

அனைத்து அம்சங்களிலும் விசேடத்துவ செயற்றிறன் வெளிப்படுத்துகையோடு நிதி ரீதியாக ஸ்திரமான ஓர் அமைப்பான Fitch Ratings இனால் செலான் வங்கி முன்மொழியப்பட்டிருப்பதோடு வங்கியின் தேசிய நீண்டகால தரப்படுத்தல் ‘A–’(lka) ஆக மாற்றம் பெற்றுள்ளது. செலான் வங்கியின் நிதி ரீதியான ஸ்திரத்தன்மைக்கும், அனைத்து அம்சங்களிலும் தொடர்ச்சியான விசேடத்துவ சேவையை உறுதி செய்வதற்கு வங்கியின் சளைக்காத அர்ப்பணிப்புக்கும் இவை சான்றாகும்.

## இலங்கை சுற்றுலாத்துறைக்கு ஊக்கமளிக்கும் பெல்வத்தை தலைமையில் இடம்பெற்ற சமையல் கலை நிபுணர்கள் நிகழ்வு

பல்வேறு வகையான பால் பொருட்களை உற்பத்தி செய்து பெறுமதியான அந்நியச் செலாவணியை நாட்டுக்காக சேமிக்கும் இலங்கையின் முன்னணி உள்ளூர் பால் வர்த்தக நாமமான பெல்வத்தை டெய்ரி (Pelwatte Dairy), இலங்கையின் சமையல் மற்றும் விருந்தோம்பல் துறைகளில் ஒரு மூலக்கல்லாக விளங்கும் இலங்கையின் சமையல் கலை நிபுணர்களை ஊக்குவிப்பதற்காக அண்மையில் நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.



நீர்கொழும்பு Amagi Aria ஹோட்டலில் நடைபெற்ற (Chef Event) சமையல் கலை நிகழ்வானது, Chef's Guild of Lanka உடன் இணைந்து பெல்வத்தை டெய்ரி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது சமையல் கலை வல்லுநர்கள் தங்களுக்குள் வலையமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான ஒரு தளமாக மாறிய அதே நேரத்தில், அவர்களின் தொழில்முறை மற்றும் திறன் மேம்பாட்டிற்கு குறிப்பிடும்படியான ஊக்கத்தையும் அளித்தது. இந்நிகழ்வின் மற்றுமொரு பங்குதாரராக Amagi Aria ஹோட்டல் விளங்கியது.

Pelwatte Dairy, நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் சுசந்த இது தொடர்பில் தெரிவிக்கையில், “இலங்கை நுகர்வோருக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உயர்தர பால் பொருட்களை வழங்குவதற்காக நாம் பெல்வத்தை டெய்ரியை உருவாக்கினோம். பெல்வத்தை டெய்ரி நிறுவனம், நாட்டிற்கு பெறுமதியான அந்நிய செலாவணியைச் சேமிக்கும் நிறுவனமாகவும் அறியப்படுகிறது. அந்த வகையில் பெறுமதியான அந்நிய செலாவணியை இலங்கைக்கு கொண்டு வரும் சுற்றுலாத் துறைக்கு ஆதரவளிப்பதானது, இலங்கை தொடர்பான எமது பெல்வத்தை டெய்ரியின் தூரநோக்குடன் கைகோர்க்கச் செய்கிறது. பல்வேறு புதிய பெல்வத்தை பால் பொருட்களை உள்ளூர் சந்தைக்கு வழங்கி புதுமைப்படுத்தவும் பல்வேறு நுகர்வோர் உணவுப் பொருட்களை வழங்கவும் பல்வேறு பால் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்படும் பெறுமதியான அந்நிய செலாவணியை சேமிக்கவும் எமது சமையல் கலை நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றினோம் என்பதை நாம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எமது பால் பொருட்களை நுகர்வோர் நேரடியாக உட்கொள்வது மட்டுமின்றி, தினசரி உட்கொள்ளும் ஏனைய உணவுப் பொருட்களின் தயாரிப்பிலும் அவற்றை வழக்கமான உள்ளீடுகளாகப் பயன்படுத்துவதும் முக்கியமாகும். பெல்வத்தை நிறுவனம் நீர்கொழும்பில் நடத்திய இந்த Chef Event ஆனது, 100 சமையல் கலை வல்லுனர்களுக்கான வலையமைப்புத் தளமாக அமைந்ததோடு, அவர்களின் தொழில்முறை மற்றும் தனிப்பட்ட திறன்களையும் மேம்படுத்தியது. இங்கு தமது பால் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வையும் பெல்வத்தை வழங்கியிருந்தது. இந்நிகழ்வை இலங்கையின் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு நிகழ்வாக பெல்வதை அமைத்திருந்ததோடு, சுற்றுலாவிலிருந்து பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தைப் பெறுவதற்கு உதவும் வழிகாட்டல் நிகழ்வாகவும் இது காணப்பட்டது. தற்போதைய தேசிய நெருக்கடியை சமாளிப்பதில் உள்ளூர் பால் தொழில்துறையின் பங்கு குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. உயர் தரத்திலான சர்வதேச தர மட்டத்தில் அமைந்த உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட பால் பொருட்களை மிகக் குறைந்த உள்நாட்டு விலை மட்டங்களில் வழங்குவது, பெல்வத்தையிலிருந்து கிடைக்கப் பெறும் ஒரு நன்மையாக விளங்குகின்றது. அந்த வகையில், இவ்வாறான தொழிற்றுறை சார்ந்த நிகழ்வுகளை எதிர்காலத்திலும் முன்னெடுக்க நாம் திட்டமிட்டுள்ளோம். இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தமைக்காக பெல்வத்தை டெய்ரி நிறுவனத்தின் சமையல் கலை ஆலோசகர் ரஞ்சன் கருணாநாயக்கவிற்கு எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.” – என்றார்.

பெல்வத்தை நிறுவனத்தின் உணவுச் சேவை முகாமையாளர் ராஸிக் டோல் இங்கு கருத்து வெளியிடுகையில், “2006 இல் நிறுவப்பட்ட எமது நிறுவனம் பால் பதப்படுத்துதல், கால்நடை தீவனம், பால் பொருட்கள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்று விளங்குகின்றது. இன்று அது இலங்கையின் முன்னணி பால் பதப்படுத்துதல் மற்றும் பால் உற்பத்தி நிறுவனமாக மாறியுள்ளது. நாம் ISO 22000:2018 சான்றிதழ் பெற்ற ஒரு நிறுவனமாகும்.

பெல்வத்தை டெய்ரி ஆனது டென்மார்க் தொழில்நுட்பத்தில் செயற்படும் அதி நவீன பால் தொழிற்சாலைகளில் ஒன்றாகும். பெல்வத்தை தயாரிப்பு வகைகளில் உள்ள பிரபலமான தயாரிப்புகளாக பெல்வத்தை முழு ஆடைப் பால்மா, பெல்வத்தை வெண்ணெய், பெல்வத்தை யோக்கட், பெல்வத்தை நெய் ஆகியன விளங்குகின்றன.” – என்றார்.

# மட்டக்களப்பு மாவட்ட விவசாய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்



**(கிரான் செய்தியாளர், மட்டக்களப்பு)**

விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற விவசாய ரீதியிலான முன்னேற்ற செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் கலந்துரையாடல் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை(14) இடம்பெற்றது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் வட மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றின் விவசாய முன்னேற்ற செயற்பாடுகளை நிர்வகித்து மேற்பார்வை செய்யும் பொறுப்பு கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரிடம் வழங்கப்பட்டுள்ளதையடுத்து, கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மீளாய்வுக் கூட்டமே இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயத் திணைக்களங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், அதனைத் தீர்ப்பதற்கான சாதகமான தீர்மானங்கள், உள்ளூர் விவசாய உற்பத்திகளை அதிகரிப்பதற்கு முனைப்பான அம்சங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன், குறைந்த மூலதனத்துடன் கூடிய விவசாய உற்பத்திகளை பெற்றுக்கொள்ளக்கூடிய தானியங்களை இனம் கண்டுகொள்வது சம்பந்தமாகவும் இங்கு அதிக கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் களுதாவளை பொருளாதார மத்திய நிலையத்தினை திறந்து மக்களின் பயன்பாட்டுக்கு விடுவது தொடர்பிலும் மற்றும் நெல் அறுவடை தொடங்கியுள்ளதனால் நெல்லுக்கான நிர்ணய விலை இன்மையால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினையினால் அதனை நெல் சந்தைப்படுத்தல் சபை மூலம் நெல்லினை கொள்வனவு செய்வது தொடர்பிலும் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. இராஜாங்க அமைச்சரிடம் கோரிக்கையினை முன்வைத்தார்.

குறித்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் உணவு பாதுகாப்பு மற்றும் விவசாய குழுவின் உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கலாமதி பத்மராஜா மற்றும் திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர், அம்பாறை மாவட்ட உதவி அரச அதிபர், மாகாண மற்றும் மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள், மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி ஆணையாளர்கள், விவசாய அமைச்சுடன் தொடர்புடைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பொருளாதார இராஜாங்க அமைச்சின் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலரும் குறித்த மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கோறளைப்பற்று தெற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



**(கிரான் செய்தியாளர்)**

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமானது வர்த்தக இராஜாங்க அமைச்சரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ச.வியாழேந்திரன் தலைமையில் புதன்கிழமை(14) இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவுவின் வழிநடத்தலின் கீழ் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்ற இவ் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், பிரதேச செயலகப் பிரிவில் 2023ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டதுடன் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்பாடுகளும் பரிந்துரைக்கப்பட்டன.

குறிப்பாக, கல்வி மற்றும் மகாவலித் திட்டம் பிரதேசத்தின் குடிநீர்ப் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. மேலும் பிரதேச மட்டத்திலான திணைக்களங்களின் பிரச்சினைகள் இனங்காணப்பட்டு அதற்கான தீர்வுகளும் முன்மொழியப்பட்டன.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் இணைப்புச் செயலாளர் பூ.பிரசாந்தன் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், சமூக மட்டப் பிரதிநிதிகளும் கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

# கடவுச்சீட்டு கைவிரல் அடையாளமிடும் வசதியை கல்முனையிலும் ஏற்படுத்துக

## மு.கா.பதில் பொருளாளர் யஹியாகான்



**(மாவடிப்பள்ளி செய்தியாளர்)**

கடவுச்சீட்டுக்காக விண்ணப்பித்து கைவிரல் அடையாளம் இடும் வசதியை கல்முனை பிரதேச செயலகத்திலும் ஏற்படுத்தித் தருமாறு முஸ்லிம் காங்கிரஸின் பதில் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு இவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

கடவுச்சீட்டுக்கான இணையவழி விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இது உண்மையில் பாராட்டுக்குரிய விடயமாகும். நாடு இன்று எதிர்நோக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடியில் கடவுச்சீட்டுக்காக விண்ணப்பிக்க கொழும்பு மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களுக்கு செல்வது என்பது பெரும் செலவுமிக்கதாகும். அதனை ஒன்லைன் வசதி மூலம் இலகுவாக்கியிருப்பது பல்லாயிரம் விண்ணப்பதாரர்களுக்கு இனிப்பான செய்தியாகும்.

இதேவேளை, கடவுச்சீட்டினை பெற்றுக் கொள்வதற்காக கைவிரல் அடையாளங்களை பதிவு செய்வதற்காக கிழக்கின் முக வெற்றிலை என அறியப்படும் கல்முனை மாநகரம் தவிர்க்கப்பட்டிருப்பது இங்குள்ள மக்களுக்கு பெரும் துயர் நிறைந்த செய்தியாகவே பார்க்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் பொத்துவில் பிரதேச செயலகங்கள் இதற்காக தெரிவு செய்யப்பட்டபோதிலும், கல்முனை தொகுதி மக்களை பொறுத்தவரை சம்மாந்துறை மற்றும் பொத்துவில் பகுதிகள் தூரம் கொண்டவை. எனவே, கைவிரல் அடையாளம் இடும் வசதியை கல்முனை பிரதேச செயலகத்திலும் ஏற்படுத்தித் தருமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்.

# வெளிநாட்டு வேலை பெற்றுத்தருவதாகக் கூறி ஒரு கோடி ரூபா பணத்துடன் முகவர் நிலைய உரிமையாளர் தலைமறைவு

## கைதுசெய்யப்பட்ட முகாமையாளருக்கு விளக்கமறியல்

**(கனகராசா சரவணன்)**

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக மட்டக்களப்பில் பலபேரிடம் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபாவை வாங்கி மோசடியில் ஈடுபட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலைய உரிமையாளர் தலைமறைவாகியதையடுத்து கைது செய்யப்பட்ட முகாமையாளரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் புதன்கிழமை(14) உத்தரவிட்டார்.

இதுபற்றி தெரியவருவதாவது, திருகோணமலை வீதியில் அமைந்துள்ள சட்டவிரோத வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றின் உரிமையாளரும் அவரின் முகாமையாளர் மற்றும் உதவி முகவர்கள் இணைந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை பெற்றுத் தருவதாக தெரிவித்து பல பேரிடம் சுமார் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபா பணத்தை மோசடியாகப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், சிலர் குறித்த முகவர் நிலையத்தின் உதவி முகவர்கள் மூலமாகவும் முகவர் நிலைய உரிமையாளரிடம் நேரடியாகவும் சிலர் முகாமையாளர் ஊடாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக பல இலட்சம் ரூபா பணத்தை வழங்கிய நிலையில், அவர்களில் சிலரை வேலைக்கு அனுப்புவது போல சுற்றுலா விசாவில் டுபாய் மற்றும் கட்டார் நாட்டுக்கு அனுப்பியுள்ள நிலையில், அவர்கள் அங்கு சென்று தொழில் இல்லாது கைவிடப்பட்டு நடுவீதியில் நிர்க்கதியான நிலையில் தங்களது உறவினருடன் தொடர்பு கொண்டு அவர்கள் தமது சொந்தப் பணத்தை செலுத்தி விமானச் சீட்டைப் பெற்றுக்கொண்டு நாடு திரும்பினர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்கள் வெளிநாட்டு வேலை பெற்றுத்தருவதாக மோசடியில் ஈடுபட்ட உதவி முகவர்களுக்கு எதிராக மட்டு. தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் இரு முகவர்களை கடந்த மாதம் கைது செய்து அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் ஒருவரிடம் சுமார் 06 இலட்சம் ரூபாவரை பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களை மட்டக்களப்பிலுள்ள பிரதான முகவர் ஊடாக அனுப்பியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து, கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பிரதான முகவர் நிலையம் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு பொலிஸார் அறிவித்த நிலையில் இது சட்டவிரோதமாக இயங்கிவருவதாகத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், அங்கு கடமையாற்றிவந்த முகாமையாளர் 04 இலட்சம் ரூபாவுக்கு அதிகமாக பணத்தை மோசடியாகப் பெற்றுள்ளதாக இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து அவரை புதன்கிழமை(14) கைதுசெய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொண்ட விசாரணையில் சித்தாண்டி, கொக்கட்டிச்சோலை, வாழைச்சேனை போன்ற பல பிரதேசங்களிலுள்ள பலரிடம் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக தானும் ஏனைய உதவி முகவர்களும் பல இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு அதனை முகவர் நிலைய உரிமையாளரிடம் வழங்கியுள்ளதாகவும் இந்த முகவர் நிலைய உரிமையாளர் வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகவும் பலரிடம் கூறி சுமார் ஒரு கோடியே 80 இலட்சம் ரூபா வரை பெற்றுள்ளதாகவும் அவர் கொக்கட்டிச்சோலை முனைக்காட்டைச் சேர்ந்தவர் எனவும் தற்போது அவர் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட முகாமையாளர் புதன்கிழமை(14) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, குறித்த முகவர் நிலைய உரிமையாளர், முகாமையாளர் மற்றும் அந்த முகவர் நிலையத்தின் உதவி முகவர்களுக்கு எதிராக இதுவரை சுமார் 50 இலட்சம் பண மோசடி தொடர்பாக 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களின் கணினி அறிவினை மேம்படுத்தும் திட்டத்துக்கு அமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை சுகாதார தகவல் முகாமை பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.முஜீப்பினால் கணினிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (மாளிகைக்காடு செய்தியாளர்)**

# புளியமரத்திலிருந்து விழுந்தவர் மரணம்

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டமடு பகுதியில் மரத்திலிருந்து விழுந்து நபரொருவர் உயிரிழந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வியாழக்கிழமை(15) இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கிண்ணியா- சூரங்கல் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஷாகுல் ஹமீட் அலிஇப்னு (49வயது) என்பவராவார்.

வீட்டிலிருந்து தனது தந்தையின் வீட்டுக்கு பக்கத்திலுள்ள புளிய மரத்தில் புளியம்பழம் ஆய்வதற்காக மரத்தில் ஏறியபோது மரத்திலிருந்து விழுந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற கிண்ணியா திடீர் மரண விசாரணை அதிகாரி சுபைர் ஷாபி குறித்த மரணம் தொடர்பில் சரியான தகவல் பெற்றுக்கொள்ள இயலாத நிலையில் பிரேத பரிசோதனையை முன்னெடுக்க வேண்டியுள்ளதால் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சடலத்தைக் கொண்டுசெல்லுமாறும் கிண்ணியா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து, திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப் பட்டுள்ள நிலையில் நேற்று(15) மாலை பிரேத பரிசோதனை இடம்பெற உள்ளதாகவும் முடிவுற்ற பின்னர் உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்க உள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**சகல கட்சிகளுடனும் பேசுவதற்கு தயாராம் எண்டு ஜனாதிபதி ரணில் சொல்லித்தாரு எலுவா? அப்ப இம்பட்டு நாளும் அவங்களோட பேசாமயா பதவியில இருக்காரு! சரி அம்மாச்சி சகல கட்சிகளோடையும் என்னத்த பேசி கிழிக்கப்போறாரோ. தான் அடுத்த தடவயும் ஜனாதிபதியாகிறத்துக்கு ஒள்ளுப்கம் சப்போட் பண்ணுங்க எண்டத சொல்லி பேய்காட்டப்போறாரு போல.**

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பு



**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு சிறுவர்களின் உடல், உள ஆரோக்கியத்தினை மேம்படுத்த மாவட்ட செயலகத்தினால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. மாவட்டத்தின் 14 பிரதேச செயலகத்தில் காணப்படும் சிறுவர் சபைக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை(14) இடம்பெற்றது.

பிரதேச சிறுவர் சபையூடாக சிறுவர்களின் உடல், உள ரீதியான ஆரோக்கியத்தினை மேம்படுத்தல் மற்றும் பங்கேற்பு உரிமையினை வழங்கும் நோக்கில் மாவட்ட செயலகத்தினால் யுனிசெப் நிறுவனத்திடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாக கிடைக்கப்பெற்ற விளையாட்டு உபகரணங்கள் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யுனிசெப் நிறுவன விசேட சிறுவர் பாதுகாப்பு நிபுணர் மரிண்டா ஆம்ஸ்ட்ரோங், மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் சியாஹுல்ஹக், மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு இணைப்பாளர் ரீ.மதிராஜ், மாவட்ட முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.முரளிதரன், தேசிய சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் நிஷா, உளவள இணைப்பாளர் ஜனார்தனி நரசிம்மன், செரி நிறுவன பணிப்பாளர் தர்ஷன் மற்றும் செயலக உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பாதசாரி கடவையில் சென்ற பெண் விபத்தில் உயிரிழப்பு

**(மீராவோடை செய்தியாளர்)**

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் புதன்கிழமை (14) உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டமாவடி - காவத்தமுனை பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய 04 பிள்ளைகளின் தாயான முகைதீன் பாவா சித்தியா எனும் பெண் தனது ஊருக்கு செல்வதற்காக பாதசாரி கடவையை கடக்கும்போது வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு உயிரிழந்துள்ளதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுகோளையேற்று ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு சென்ற பிரதேச மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் போதையுடன் காணப்பட்டதோடு, காயங்களுடன் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானை–மொட்டு கட்சி கூட்டணி அரசாங்கம் திருமலையை திட்டமிட்டே புறக்கணிக்கின்றது

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி.



**(அப்துல்சலாம் யாசீம், கிண்ணியா, மீனோடைக்கட்டு செய்தியாளர்கள்)**

யானை - மொட்டு கூட்டணி அரசாங்கம் திருகோணமலை மாவட்டத்தை திட்டமிட்டு புறக்கணித்து வருகின்றது. இது குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன் என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் புதன்கிழமை(14) நடைபெற்ற மக்கள் சந்திப்பின்போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது, இந்த அரசாங்கம் திருகோணமலை மாவட்டத்தை எந்தளவுக்கு புறக்கணிக்கின்றது என்பதற்கு தற்போதைய கல்விக் கல்லூரி ஆசிரியர் நியமனம் சிறந்ததொரு உதாரணமாகும்.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை இங்கு ஆசிரியர் பற்றாக்குறை மிக அதிகளவில் காணப்படுகின்றது. உதாரணத்துக்கு கணிதப் பாடத்துக்கு 137 ஆசிரியர் பற்றாக்குறையும் ஆரம்பக்கல்விக்கு 106 ஆசிரியர் பற்றாக்குறையும் தமிழ்மொழி பாடத்துக்கு 78 ஆசிரியர் பற்றாக்குறையும் புவியியல் பாடத்துக்கு 57 ஆசிரியர் பற்றாக்குறையும் காணப்படுகின்றது.

இவ்வாறே விஞ்ஞானப் பாடத்துக்கு 52பேர், தகவல் தொழில்நுட்ப பாடத்துக்கு 52பேர் என ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதேபோல ஏனைய பாட ஆசிரியர்களுக்கும் பெருமளவு பற்றாக்குறை நிலவுகின்றது. இவ்வளவு பற்றாக்குறை இருந்தும் இம்முறை நியமனம் பெறுகின்ற திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கல்விக் கல்லூரி ஆசிரியர்கள் வேறு மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக நான் கல்வியமைச்சருக்கும் கிழக்கு ஆளுநருக்கும் தெளிவு படுத்தினேன். அதேவேளை, பாராளுமன்றத்திலும் உரையாற்றியுள்ளேன்.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க திருகோணமலை மாவட்ட ஆசிரியர்களை இம் மாவட்டத்துக்கே நியமிக்குமாறு கோரினேன். எனினும், ஆசிரியர் பற்றாக்குறை இன்னும் அப்படியே இருக்க, மாவட்ட கல்விக் கல்லூரி ஆசிரியர்களும் வேறு மாகாணங்களுக்கே நியமிக்கப்பட்டுள்ளனர்.

எமது மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தித்து கல்வி பின்னடைவை சீர்செய்ய இந்த அரசாங்கத்துக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. இதனால் வேறு மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள குறித்த ஆசிரியர்களும் அவர்களது பெற்றோர்களும் பெரும் சிரமத்தை அனுபவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்றைய வாழ்க்கைச் செலவு போராட்டத்துக்கு மத்தியில் இதன் தாக்கம் மிக அதிகம் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இது தொடர்பாக மொட்டுக்கட்சியின் திருகோணமலை மாவட்ட பிரதிநிதி ஏதும் நடவடிக்கையை முன்னெடுத்ததாகத் தெரியவில்லை. அதேபோல யானைக் கட்சியின் உள்ளூர் அமைப்பாளர்கள் கூட இதில் கவனம் செலுத்தவில்லை.

இதனால் திருகோணமலை மாவட்டம் தொடர்ந்தும் கல்வியில் பின் தங்கி நிற்கும் நிலையே உள்ளது. இவற்றை வைத்துப் பார்க்கும் போது யானை – மொட்டு கூட்டணி அரசாங்கம் திருகோணமலை மாவட்ட மக்களை புறக்கணிக்கின்றது என்பது தெளிவாகின்றது. இவர்களுக்கு எம்மக்களின் வாக்கு மட்டுமே தேவை. எனினும், அவர்களது தேவைகளை நிறைவு செய்து கொடுக்க இந்த அரசாங்கம் தயாரில்லை என்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார்.

# 4 கால்கள் - 4 கைகள் - 4 காதுகள் 2 முதுகுகள் - 2 இதயங்களுடன்

## பீகாரில் பிறந்த அதிசயக் குழந்தை



இந்தியாவின் பீகார் மாநிலத்தில் 4 கால்கள், 4 கைகள், 4 காதுகள் மற்றும் 2 முதுகுகள், 2 இதயங்களுடன் குழந்தையொன்று பிறந்துள்ளமை அப்பகுதியினிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் மாநிலம், சாப் ராவை அடுத்த ஷியாம்சாக் பகுதியைச் சேர்ந்த நிறைமாதக் கர்ப்பிணியான பிரசுதா பிரியாதேவி என்ற பெண் பிரசவத்துக்காக அங்குள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கு அழகான பெண் குழந்தையொன்று பிறந்துள்ளது.

குழந்தையைப் பார்த்ததும் அவருக்கு பிரசவம் பார்த்த வைத்தியர்கள் ஆச்சரியமடைந்துள்ளனர். காரணம் அந்தக் குழந்தைக்கு 4 கால்கள், 4 கைகள், 4 காதுகள் மற்றும் 2 முதுகுகள் இருந்துள்ளன. இதேபோல குழந்தையின் உடலை பரிசோதித்தபோது குழந்தைக்கு 2 இதயங்களும் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து அந்தக் குழந்தையை வைத்தியர்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றி சிகிச்சையளித்தனர். என்றாலும் அந்தக் குழந்தை சிகிச்சை பலனின்றி பிறந்த 20 நிமிடங்களிலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இதற்கிடையே அதிசயக் குழந்தை குறித்த தகவல் சமூக வலைத்தளங்களில் பரவியது. இதனைப் பார்த்த மக்கள் அந்தக் குழந்தை கடவுளின் குழந்தை என்றும், அதனைப் பார்க்க வேண்டுமென்றும் கருத்துப் பதிவிட்டுள்ளனர்.

இந்தத் தகவல் வைரலானதைத் தொடர்ந்து அந்தக் குழந்தை பிறந்த வைத்தியசாலைக்கு முன் ஏராளமானோர் கூடினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் குழந்தை இறந்த தகவலை வைத்தியர்கள் தெரிவித்த பின்னர், அங்கு திரண்டிருந்தவர்கள் கவலையுடன் கலைந்து சென்றனர்.

# கிரீஸ் கடலில் கவிழ்ந்த அகதிகள் படகு: 79 பேர் பலி; 104 பேர் உயிருடன் மீட்பு

## பலரின் நிலை கவலைக்கிடம்; மேலும் பலர் மாயம்

உலக செய்திகள்









கிரீஸ் கடற்பரப்பில் அகதிகள் சென்ற படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 79 பேர் உயிரிழந்துள்ளதுடன் 104 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். பலர் காணாமல் கோயுள்ளனர்.

காணாமல் போனோரைத் தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. உயிருடன் மீட்கப்பட்ட பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உயிருடன் மீட்கப்பட்டோர் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தேடுதல் பணிகளில் கிரீஸ் கடற்படைக் கப்பல்கள், இராணுவ விமானம், ஹெலிக்கொப்டர், 6 மீட்புப் படகுகள் ஈடுபடுத்தப்பட்டன.

லிபியாவிலிருந்து எதென்ஸ் நகருக்கு சட்டவிரோதமாகச் சென்ற அகதிகள் அங்கிருந்து இத்தாலி செல்லவிருந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை (12) அங்குள்ள மீன்பிப் படகில் ஏறி இத்தாலிக்குத் தப்பிச்செல்ல முயன்றுள்ளனர்.

அப்போது அந்தப் படகு கிரீஸ் கடற்பகுதியில் கவிழ்ந்தது. படகு கவிழ்ந்த தகவலைத் தொடர்ந்து கடற்படை மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

இந்த விபத்தில் உயிரிழந்த 79 அகதிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. உயிருடன் மீட்கப்பட்ட 104 பேர் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச கடற்பகுதியில் நிகழ்ந்த இந்த விபத்து பலத்த காற்றின் காரணமாக ஏற்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து கிரீஸ் கடற்படை அதிகாரியொருவர் தெரிவிக்கையில்,

''லிபியாவிலிருந்து வந்த அகதிகளை ஏற்றிச்சென்ற மீன்பிடிப் படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 79 பேர் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து அதிகாலை முதல் மீட்பு நடவடிக்கை போர்க்கால அடிப்படையில் நடைபெற்றது.

படகில் சென்ற எவருமே பாதுகாப்பு அங்கி('லைஃப் ஜொக்கெட்') அணிந்திருக்கவில்லை. அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. இவர்கள் லிபியாவிலிருந்து இத்தாலி சென்றதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது'' - என்றார்.

போர் மற்றும் வறுமையால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் பெற விரும்பும் அகதிகளை சட்டவிரோதமாக ஏற்றிக்கொண்டு அந்தப் படகு கிழக்கு லிபியாவின் டோப்ரக் நகரிலிருந்து புறப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.



# விண்வெளியில் பூத்த 'ஷின்னியா'

விண்வெளியில் பூத்த பூவின் படத்தை அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு அமைப்பான 'நாசா' பகிர்ந்துள்ளது. இது விண்வெளி வீரர்களுக்காக பரிசோதனை முயற்சியாக வளர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உலக நாடுகள் விண்வெளியில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தும் நோக்கில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. பிற கிரகங்களில் மனிதர்கள் வாழும் சாத்தியக்கூறுகள் தொடங்கி அந்தக் கோள்களில் நீர் உள்ளதா என்பது வரையில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை குடியேற்றும் ஆராய்ச்சிகளும் நடைபெற்று வருகிறது.

அப்படி மனிதர்கள் பிற கிரகங்களுக்குச் செல்லும்போது அவர்களுக்கு உதவும் வகையில் சோதனை முயற்சியாக விண்வெளியில் தோட்டம் அமைத்து செடிகள் வளர்க்கப்படுகின்றன. இதன்மூலம் அவர்களுக்கு தகுந்த ஊட்டச்சத்து மிக்க உணவு கிடைப்பது உறுதிசெய்யப்படும் என நாசா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சந்திரன் மற்றும் செவ்வாய்க்கு பயணம் செல்லும்போது இது பெரிதும் உதவுமென்றும் சொல்லப்படுகிறது.

''சர்வதேச விண்வெளி நிலையத்திலுள்ள விண்வெளி தோட்டத்தில் இந்த 'ஷின்னியா' ((zinnia) மலர் வளர்விக்கப்பட்டது. விஞ்ஞானிகள் 1970களிலிருந்து விண்வெளியில் தாவர வளர்ப்பு சார்ந்த ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், இக் குறிப்பிட்ட பரிசோதனையை கடந்த 2015இல் நாசா விண்வெளி வீரர் கேஜெல் லிண்ட்கிரென் சர்வதேச விண்வெளி நிலையத்தில் தொடங்கினார்.

இது வெறும் காட்சிக்கானது அல்ல. விண்வெளியில் தாவரங்களின் வளர்ச்சி குறித்து புரிதல் கிடைக்கிறது. முக்கியமாக சந்திரன், செவ்வாய் உட்பட பல்வேறு கிரகங்களில் நீண்ட நாள் பயணத்திற்கு பெரிதும் உதவும்" - எனவும் நாசா தெரிவித்துள்ளது.

# துறைகளற்ற அமைச்சராக தொடரப்போகும் செந்தில்பாலாஜி





அமைச்சர் செந்தில் பாலாஜியின் துறைகளை வேறு அமைச்சர்களுக்கு மாற்றுவது தொடர்பாக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரிந்துரைத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

செந்தில் பாலாஜியை சட்டவிரோத பண மோசடி வழக்கில் அமுலாக்கத் துறை அதிகாரிகள் புதன்கிழமை அதிகாலை கைதுசெய்த நிலையில் அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இதயத்தில் அடைப்பு இருப்பதாகவும் உடனடியாக பை-பாஸ் அறுவை சிகிச்சை செய்யவேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

இதற்கிடையே வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் நேரில் சென்ற சென்னை முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லி, செந்தில் பாலாஜியை ஜூன் 28 வரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

# போர் - வன்முறை: உலகம் முழுவதும் 2 மாதங்களில் 11 கோடி பேர் இடம்பெயர்வு

உலகம் முழுவதும் போர், மனித உரிமை மீறல்கள் போன்ற காரணங்களால் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து சுமார் 11 கோடி பேர் புலம்பெயர வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. அகதிகள் நல ஆணையர் பிளிப்போ கிராண்டி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர், ஆயுதக் குழுக்களுக்கு இடையிலான மோதல், குறிப்பிட்ட இனத்தவர்களை குறிவைத்து நடத்தப்படும் வன்முறை, மனித உரிமை மீறல்கள் போன்ற காரணங்களால் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து இதுவரை சுமார் 11 கோடி பேர் தங்களது வாழ்விடங்களை விட்டு புலம் பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

**சூடானில் 2 மில்லியன் பேர் வெளியேற்றம்**

சூடானில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுப்போர் காரணமாக இரண்டு மில்லியனுக்கும் அதிகமானோர் தங்களின் வாழிடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மேலும் 1.6 மில்லியனுக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளதுடன், 5 இலட்சத்து 30ஆயிரம் பேர் அண்டை நாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 92 ஆயிரம் டொலருக்கு எல்.பி.எல். ஏலம்: வரலாறு படைத்த டில்சான் மதுஷங்க

## தமிழ்பேசும் வீரர்கள் நால்வருக்கும் வாய்ப்பு


















2023 லங்கா ப்ரீமியர் லீக் தொடரின் ஏலம் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்த நிலையில் இலங்கை அணியின் இளம் வேகப்பந்துவீச்சாளர் டில்சான் மதுஷங்க 92 ஆயிரம் டொலரில் ஜவ்னா கிங்ஸ் அணியால் ஏலம் எடுக்கப்பட்டு அதிக விலைக்கு ஏலம் போன வீரர் என்ற சாதனை படைத்தார். இவரின் தந்தை ஒரு மீனவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த ஏலத்தில் மொத்தமாக ஐந்து அணிகளினாலும் 20 வெளிநாட்டு வீரர்கள் மற்றும் 75 உள்நாட்டு வீரர்கள் வாங்கப்பட்டனர்.

வெளிநாட்டு வீரர்களை பொருத்தவரை அவுஸ்திரேலியாவின் முன்னணி வீரர்களான கிரிஸ் லின் (ஜப்னா கிங்ஸ்), பென் கட்டிங் (கோல் டைட்டன்ஸ்) ஆகியோர் வாங்கப்பட்டுள்ளதுடன், பாகிஸ்தான் அணியின் வஹாப் ரியாஸ் (கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்), இப்திகார் அஹமட் (கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்), மொஹமட் நவாஸ் (கொழும்பு ஸ்ரைக்கர்ஸ்), ஆசிப் அலி (பி-லவ் கண்டி) மற்றும் சொஹைப் மலிக் (ஜப்னா கிங்ஸ்) போன்ற முன்னணி வீரர்கள் வாங்கப்பட்டனர்.

டில்சான் மதுஷங்கவுக்கு அடுத்தபடியாக இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் சரித் அசலங்கவை 80 ஆயிரம் டொலர்களுக்கு ஜப்னா கிங்ஸ் அணி வாங்கியதுடன், தனன்ஜய டி சில்வா 76 ஆயிரம் டொலர் (தம்புள்ள ஓரா), பினுர பெர்னாண்டோ 76 ஆயிரம் டொலர் (தம்புள்ள ஓரா) மற்றும் தினேஷ் சந்திமால் 72 ஆயிரம் டொலர் (பி-லவ் கண்டி) என அதிக தொகைக்கு வாங்கப்பட்டனர்.

தமிழ்பேசும் வீரர்களை பொறுத்தவரை கடந்த ஆண்டு வளர்ந்துவரும் வீரருக்கான விருதை பெற்றிருந்த விஜயகாந்த் வியாஸ்காந்தை 18 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கு ஜப்னா கிங்ஸ் அணி மீண்டும் வாங்கியிருந்ததுடன், தீசன் விதுசன் மற்றும் ரத்னராஜா தேனுரதன் ஆகியோரை அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த 5 ஆயிரம் டொலர்களுக்கு ஜப்னா கிங்ஸ் அணி வாங்கியது. அதேநேரம், கடந்த ஆண்டு வாய்ப்பை பெற்றுக்கொள்ளாத வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் சிராஸ் இம்முறை 5 ஆயிரம் டொலர்களுக்கு கோல் டைட்டன்ஸ் அணியால் வாங்கப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான எல்.பி.எல். தொடர் அடுத்த மாதம் 30 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

# செப். 17இல் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பம்

பலராலும் எதிர்பார்க்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் நடைபெறும் இடம், திகதி என்பன ஆசிய கிரிக்கெட் பேரவையினால் நேற்று (15) உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அதன்படி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி முதல் செப்டெம்பர் 17ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடத்தப்படும். இதில், 4 போட்டிகள் பாகிஸ்தானிலும் 9 போட்டிகள் இலங்கையிலும் என மொத்தமாக 13 போட்டிகள் ஒருநாள் வடிவில் (50 ஓவர்கள்) நடத்தப்படவுள்ளன.

இம்முறை ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நடப்பு சம்பியனான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் மோதவுள்ளன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# விம்பிள்டன் பரிசுத்தொகை அதிகரிப்பு

ஆண்டின் மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான விம்பிள்டன் டென்னிஸ் தொடர் ஜூன் 27 முதல் ஜூலை 10 வரை நடக்கிறது. இந்நிலையில், இந்த ஆண்டுக்கான விம்பிள்டன் டென்னிஸ் பரிசுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த பரிசுத் தொகை 17 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான விம்பிள்டன் தொடரின் மொத்த பரிசுத் தொகை சுமார் ரூ.463 கோடி ஆகும். இந்தப் பரிசுத் தொகையானது, கொரோனா தொற்று பாதிப்பு உலகில் ஏற்படுவதற்கு முன்னதாக வழங்கப்பட்ட பரிசுத் தொகையை விட 17.1 சதவீதம் அதிகமாகும்.

இரு பாலாருக்குமான ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வெல்பவருக்கு தலா ரூ.24.60 கோடி பரிசுத் தொகை வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு பரிசுத் தொகையைவிட 11 சதவீதம் அதிகமாகும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7